ம இலக்கம் 2041

KUDI ARASU. தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

குடி அரசு

வருட சந்தா முன் பணம் ...	ரூ 3—0
6 மாத சந்தா ,, ...	ரூ 1-12
வெளிநாட்டிற்கு ,, ...	ரூ 4—0

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு. விபவ ஞு ஐப்பசி மீ 5 உ (21—10—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 26

இப்பொழுதுதான் வந்தது!! புதியசரக்குகள்!!

உறுதியான ஸ்ரிஞ்டி கறுப்புநூல் பெல்ட்டிங்குகள்.

கீழ்கண்ட சரசமான விலைக்கு விற்கப்படும்.

3/16 இன்சு கனம் உள்ளது:—

2 இன்சு அகலம்	ரூ.	0—7—0	ஓர் அடி.
3 ,, ,,	,,	0—10—6	,,
4 ,, ,,	,,	0—14—0	,,

1/4 இன்சு கனம் உள்ளது:—

4 இன்சு அகலம்	ரூ.	1—2—6	ஓர் அடி.
5 ,, ,,	,,	1—7—6	,,
6 ,, ,,	,,	1—12—0	,,

26 கேஜ் கலாய் இரும்புத்தகடுகள் அடியிற்கண்ட விலைக்கு விற்கப்படும்:—

6 அடி நீளம் 33 இன்சு அகலம்	ரூ.	2—4—0	ஒரு தகடு.
7 ,, ,,	,,	2—8—0	,,
8 ,, ,,	,,	3—0—0	,,
9 ,, ,,	,,	3—6—0	,,
10 ,, ,,	,,	3—12—0	,,

MASSEY & CO. LTD. ENGINEERS

மாஸி அண்டு கம்பேனி (லிமிடெட்)
திருச்சிரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட், கோயமுத்தூர்.

போட்டோ ஆல்பம்.

நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ணு எஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

இனும்! இனும்!!

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன் பேனா இனும். எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

ஜினான் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்

மேற்கண்டபடி எந்தவேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஞு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்வர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

'திராவிடன்'

தினப்பதிப்பு சந்தா விபரம்.

மாதமொன்றுக்கு ரூ. 1—6—0
சென்னையிலும் ஏஜண்டு உள்ள இடங்களிலும்
மாதமொன்றுக்கு ,, 1—0—0
தனிப்பிரதி 0—0—6
மலாய் நாட்டுக்கு
வருஷம் ஒன்றுக்கு ,, 18—0—0

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.

பிளாக்குகள்.

புத்தகங்களுக்கும், விளம்பரங்களுக்கும், லேபில்களுக்கும், இன்னும் இதர அச்சுவேலைகளுக்கும் வேண்டிய சகலவிதமான

லைன், ஆப்டோன்,
கலர்பிளாக்குகள்

35 வருஷ அனுபோகஸ்தரால் தயாரிக்கப்படுவது

உயர்ந்த வேலைப்பாடு,
திருப்திக்கு உத்தரவாதம்.

கொஞ்சகாலத்திற்கு சார்ஜுகள் வெகுவாய் குறைக்கப்பட்டிருக்கின்றன. கேட்லாக் இனாம்.

ஜான் பிரான்கீஸ், சொந்தக்காரர்
பாஸ்டியன் ஸ்டுடியோ
173, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
சென்னை.

எங்கள் விசேஷகுறைந்த விலை விற்பனை

டேபில் டைம்பீஸ் இனாம்!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்குமேஜையின் பேரில்வைக்கக்கூடிய ஒரு அழகான டேபிள் டைம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம், முந்துங்கள். விலை ரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்.

ஜீனைன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ்போஸ்டு, மதராஸ்.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச்செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சு. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள்:- 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0. சு. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹொட்டிகல்சர் தோட்டம், சேலம்.

தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத
"ஆனந்தகுணபோதினி"
ஆடிமாதமுதல் ஆங்கில மாத பத்திரிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக
3-வது ஆண்டு வெளிவருகின்றது (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S. G. இராமானுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

ஆரம்ப ஞானபோதினியில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வெளிவந்ததில்லை. கௌரவமான கிடைப் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஆனந்தபோதினி, இதுவே விசித்திர விலாசம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சித்ரமணி, இதுவே ஆனந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகைதமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளிநாடு ரூ. 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

சி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, சென்னை.

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
இதை—சாதனை செய்.

சுவாச காச ரோக நிவாரணி

என்னும் ஆஸ்த்மா பௌடர் சிகிட்சை.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சிதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும் சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், விஷஜுரம், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் இந்த ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறைபரீக்ஷித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், பூ. மா. சொக்கலிங்க முதலியார், திருநாவுக்கரசு வைத்தியசாலை
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)

மதனகாமேஸ்வர லேகியம்.

வீர்யவிர்த்திக்கு நிகரற்றது. உத்திரவாதமுள்ளது.

கிரமமாக சாப்பிட்டுவந்தால் துரித ஸ்கலிதம், சொற்பன ஸ்கலிதம் முதலியன தீரும். நீர்த்துப்போன இந்திரியம் கெட்டிப்படும். குறைந்துபோன இந்திரியம் விருத்தியாகும். தளர்ந்துபோன நரம்புகள் உரத்துப் பெருத்து முறுக்கேறி ஜனனேந்திரியக் கருவிகள் பருத்துப் பலப்படும். தம்பன சக்தி உண்டாகும்.

20 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் விலை ரூ 2—8—0 தபால்செலவு பிரத்யேகம்.

சித்தவைத்தியசாலை, ஆநந்தநிலயம், திருச்செங்கோடு. S. I.

சுவாமி விவேகாநந்தரின் உண்மைஉபதேசம்

(கைவல்ய சாமியார் எழுதுவது)

முன் தொடர்ச்சி

சிறிது நாட்களுக்குமுன் "சுவாமி விவேகாநந்தர் சொன்ன நன்மொழிகள்" என்ற தங்கள் வாதங்களுக்கு அனுகூலமானதை மட்டும் கனம் கலியாணசுந்தர முதலியார் பத்திரிகையில் எழுதியிருந்தார். சுவாமி விவேகாநந்தர் சொன்ன அநேக உண்மையான உபதேசங்களை அவர் விட்டுவிட்டபடியால், முதலியார் விட்டுவிட்டதில் சிலவற்றை முன்னிரண்டு வியாசங்களில் எழுதினேன். இந்த வியாசத்திலும் சிலவற்றை எழுதுகிறேன்.

"சமயவொழுக்கமென்பது உள்ளன்புடன் எம்பெருமானது திருவடிகளிலே செய்யப்படும் நிர்மலமான பக்தியேயன்றி வெறும் வெளிச்சடங்குகளல்ல. ஒருவன் மனமொழி மெய்களில் பரிசுத்தனயிருந்தாலன்றி, அவன் கோவிலுக்குள் வந்து சிவனைத் தரிசித்தலால பயனில்லை, மனத்திலும் மெய்யிலும் பரிசுத்தமாய் பிரார்த்திப்பவருக்கே சிவபெருமான் பிரசன்னமாகிறார். அபரிசுத்தமான மனத்துடன் பிறருக்குத் தத்துவஉபதேசம புரியவருபவர்களின் கதி துர்க்கதியே. பகிர்முக உபாசனையும் அந்தர்முக உபாசனையும் அகத்தூய்மையுமே உண்மையானவை. அவையின்றேல் வெளிப்பூசையில் பயன் ஒன்றுமில்லை. ஆகவே இவைகளை நீங்கள் யாவரும் கருத்தில் வைக்கவேண்டும். புண்ணிய க்ஷேத்திரத்திற்குப் போய்விட்டால் தங்கள் பாவமெல்லாம் போய்விடுமென்று நினைக்கிறார்கள். ஒருவன் அபரிசுத்தமாய் கோவிலுக்குள் போவானேயாகில் அவன் அங்குள்ள பாவங்களையும் மூட்டை கட்டிக்கொண்டு முன்னிலும் அதிகப் பாவச்சுமையுடன் வீட்டிற்குத்திரும்பிப்போவான்"

"நான் அத்வைதத்தையே அதிகமாய்ப் பிரசங்கித்து வருகிறேனென்றும், துவைதத்தைக் கொஞ்சங்கூடச் சொல்லுகிறதில்லையென்றும் நான் அமெரிக்காவிலிருக்கையில் சிலர் குறை கூறக் கேட்டிருக்கிறேன். அது உண்மையே. த்வைத சித்தாந்தத்தை யனுசரித்த பூசையிலும் உபாசனையிலும் அபரிமிதமான அழகும், அற்புதமான அன்பும், ஆனந்த பரவசமும் உண்டென்பது எனக்குத்தெரியும். ஆனல் ஆனந்தத்தில் அழுவதற்குக்கூட இது சமயமன்று. இதுவரையில் நாம் அழுததுபோதும். அழுதழுது அகம் நெகிழ உருகுவதற்கு இனி சிறிதும் சரிப்படாது. நாம் இப்படி நெஞ்சமுருகி கலிந்தே மிருகப்பிராயராய் விட்டோம். இரும்பை ஒத்த தசைவன்மையும் உருக்கை நிகர்த்த நரம்பின் ஆற்றலும் படைத்து எதற்கும் அஞ்சாமல் பிரபஞ்சத்தின் அற்புதமான ரகசிய தத்துவங்களை உள் நுழைந்தறிந்து, எதையும் லட்சியம் செய்யாமல் காரியத்தை சாதிக்கும் வல்லமை வாய்ந்த ஸ்திர சங்கல்பமுள்ள மகாதீரர்களே நம் நாட்டிற்கு இப்பொழுது வேண்டியவராயிருக்கிறார்கள்-அத்தகைய நிலையானது ஏற்பட்டு நிலைபெற்றுஉறுதிப்படுவதற்கு அத்வைதத்தால் போதிக்கப்படுவதான எல்லாம் ஏகஸ்ரூபமென்னும் தத்துவத்தை யறிந்து அநுசந்திப்பதினலேயே சாத்தியமாகும். அதுவே பெருமை யடைவதற்கு தகுந்த உபாயம். உங்கள் புராணங்களில் சொல்லியுள்ள முப்பத்து முக்கோடி தேவர்களிடத்தும், அவர்களும் போதாமல் அயல் நாட்டார்களால் அவ்வக்காலத்தில் கொண்டுவரப்பட்டு உங்களுக்குள் நிலை கொண்டிருக்கிற மற்ற தேவர்களிடத்தும் உங்களுக்கு நம்பிக்கையிருந்து உங்களிடத்து மாத்திரம் நம்பிக்கையில்லை யென்றால் உங்களுக்கு மோட்சமேயில்லை. ஆகவே நீங்கள் உங்களிடத்திலேயே முதலில் நம்பிக்கை கொள்ளுங்கள். அமெரிக்காவிலுள்ள ஜனங்களின் சிறப்புக்குக் காரணமென்ன தெரியுமா? அவர்களுக்கு சுயபலத்திலுள்ள விசேஷமான நம்பிக்கையே. ஒரு ஆங்கிலேய சிறுவனும் "நான் ஆங்கிலேயன், நான் எதையும் செய்வேன்" என்று சொல்லுவான். அமெரிக்கச் சிறுவனும் அப்படியே சொல்லுவான். ஒவ்வொரு ஐரோப்பியப் பையனும் அவ்வாறே புகல்வான். நமது சிறுவர்களும் அதேபிரகாரம் இங்கே சொல்லுவார்களா? ஒருக்காலுமில்லை. அந்த சிறுவர்களின் தகப்பன்மார் கூட சொல்லமாட்டார்கள். நமக்குச் சுய சக்தியில் நம்பிக்கை போய்விட்டது. ஆகையால்தான் ஜனங்களுக்கு உள்ளக்கிளர்ச்சியை உண்டாக்குவதற்கும், ஒவ்வொருவருக்குள்ளும் தான் தான் என்று நம்பும் அறிவுக்கு விஷயமாயுள்ள ஆத்மாவின் சுவரூப மகிமையை உணர்த்துவதற்கும், இந்த அத்வைத வேதாந்தத்தைப் பிரசங்கிப்பது அத்யாவசியமாகிறது. எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய சர்வாங்கீகாரமாயுள்ள ஆதாரங்களைக் கொண்டே நான் இதைப் பிரசங்கிக்கின்றேன்."

"உங்கள் பேரிலுள்ள நேசத்தினால் நான் இப்படிச் சொல்லுகிறேன். தோள்வலி யிருந்தால் கீதையின் உபதேசமும் செவ்வையாய் விளங்கும். நான் அத்வைத மதத்தைப் போதிக்கிறேனென்று என்பேரில் அருவை அடைகிறார்கள். நான் யாதொரு மதத்தையும் போதிக்கவில்லை. ஆத்மாவைப்பற்றிச் சொல்லுகிறேன். நீங்கள் அநேககாலமாக ஆத்மாவைப்பற்றித் தெரிந்தும் காலம் வந்தபொழுது எழுந்து வேலைசெய்ய ஒருவனைக்கூட காணேம். வெகு அசங்கியமானதல்லவா இப்படியிருப்பது; அதற்குக் காரணம் பலவீனந்தானே; வேற்றரசர்களுடைய அரசாட்சியும் வருணசிரமங்களினுடைய கொடுமையும் முதுகெலும்பற்ற புழுக்களாக நம்மைச் செய்துவிட்டன. ஆகையால் உபநிஷத்துக்களுடைய உபதேசத்தை நிலை நிறுத்துங்கள். இது முதலிய அபிப்பிராயங்கள் குகைகளிலேயும் காடுகளிலேயும் பள்ளிக்கூடங்களிலேயும் கோவிலிலேயும் குடிசையிலேயும் ஸ்திரீ-புருஷர் யாவர்க்கும் பரவும்படி செய்யுங்கள். இப்படியாக வேதாந்தத்தின் கோட்பாடுகளை அறிந்தார்களானால். ஜாதிகளிருந்தாலும் அவைகளினுடைய உரிமைகள் போய்விடும். உரிமை என்னும் பிசாசுகள் ஜாதிகளைப் பற்றிக்கொண்டு செய்த கொடுமையே நம் நாட்டை சீரழித்தது." அரசன் என்பவனுக்கும் சக்கிலி எனப்படுவனுக்கும் யாதுபேதம்? அரசன் செருப்புகளைப் பழுது பார்க்கமாட்டான்; சக்கிலி அரசாட்சி செய்யமாட்டான்; இவர்களில் உயர்ந்தவன் யார்? அவனவன் வேலையில் அவனவன் உயர்ந்தவன்தான். வேதாந்தத்தின் உபதேசமாவது, யாவருக்கும் சமத்துவம் வேண்டுமென்பதும் ஒருவனுக்குரியது மற்றொருவனுக்கும் உரியதாகும் என்பதுமாம். செம்படவனுக்கு வேதாந்தத்தைக் கற்பித்தால் அவன் "உன்னைப்போல் நானும் மனிதனே; நான் செம்படவன், நீ தத்துவஞானி; அவ்வளவுதானே. உன்னிடமுள்ள அதே கடவுள்தான் என்னிடத்திலுமிருக்கிறார்' என்பான். அதுதான் நமக்கு வேண்டியது. ஒருவருக்கும் அதிகமான உரிமை கூடாது. எல்லோருக்கும் சமமாயிருக்கவேண்டும்; ஒவ்வொருவனுக்கும் தன்னிடத்தில் தெய்வத்தன்மை இருக்கிறதென்று கற்பிக்கப்படட்டும். அவன் முக்தியடையும் மார்க்கத்தை தானே தேடிக்கொள்ளுவான். அபிவிர்த்திக்கு முதன் முதல் வேண்டியது சுவாதந்திரியமே.

"சாதிகளைக்குறித்த சச்சரவுகளே எனக்கு மிகவும் மனவருத்தத்தை உண்டுபண்ணுகின்றன. இருதாரத்தாருக்கும் அது நிஷ்பலம். உயர் குலத்தாருக்கே அதிலும் பிராமணர்களுக்கே முக்கியமாய் அது யபனற்றதாகும். ஏனெனில் தங்களுக்கே சில மரியாதை உரியவை, ஏனையோருக்கு இல்லை என்று சொல்லும்படியான சுதந்திரத்திற்குக் காலம் போய்விட்டது. உயர்குலம் தன்னை யடக்கம் செய்யும்பொருட்டுத்தானே குழிவெட்டிகொண்டால் மிக்க நலம். மேலும் அப்படிச்செய்வது அதனுடைய கடமையாகும்"

"உயர் குலத்தார் என்பவர் அவ்வாறு செய்யத்தாமதம் செய்யின் அது அழுகிக் கோரமான மரணத்தை யடையும். மற்றவருடைய க்ஷேமத்தின்பொருட்டு முயலவேண்டியவன் பிராமணனே யாவான். அதை செய்தால்தான் அவன் பிராமணனவான். அப்படிச் செய்யாமல் 'பணத்தைச் சம்பாதிப்பவன் பிராமணனல்லன். சரியான பிராமணனும் பாத்திரவானும் இருப்பவனுக்குக் கொடுப்பீராகில் மோக்ஷம் பெறுகிறீர்கள். பாத்திரனல்லாதவனுக்குக் கொடுப்பவன் நரகத்தை யடைவான்' என்று சாஸ்திரம் சொல்லுகிறது. லௌகிக வியவகாரம் இல்லாதவனேபிராமணன். லௌகீக விவகாரம் இதர ஜாதிகளுக்கே உரியது. தாங்கள் பிரமணர்கள் என்பதை கவனிக்கவேண்டியது. பிரமணனுக்கு மரியாதை ஏன் செய்யவேண்டுமென்றால் அவன் நற்குணங்களுக்கு நிதியாய் இருக்கின்றமையாலென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அந்த நிதியைத் திறந்துயெல்லாருக்கும் தானம் செய்யுங்கள்"

"ஒவ்வொருவனும் யோகியாய்ப் போய்விடவேண்டுமென்கிறான்; தியானத்தில் அமர்ந்திருக்கவேண்டுமென்கிறான்; நாள்முழுவதும் உலகவிவகாரங்களைச் செய்துகொண்டுகர்மகாண்டத்தில்அழுந்தியிருந்துவிட்டு சாயுங்காலத்தில் மூச்சை மூன்று தடவையிழுத்தால் ஆகாயத்திலிருந்து ரிஷிகள் குதித்து பாவத்தையெல்லாம் போக்கிவிட்டதாகச் சொல்லுகிறான். இது என்ன கேலி விளையாட்டா! இதைவிட வேறு ஆபாசமும்உண்டோ? இவையெல்லாம் சிரிப்பிற்கிடமாகும். சித்த சுத்தியும் தூய்மையான இருதயமும் முதன்முதலில் வேண்டியது. உங்களைச் சுற்றிலுமுள்ள ஏழை ஜனங்களே உங்களுக்கு தெய்வம். அவர்களை முதலில் பூசித்தீர்களானல் கடவுளைப் பூசித்தவர்களாவீர்கள்"

"எல்லாவற்றிற்கும் முதலாக உங்கள் தேசத்தின் க்ஷேமத்தை முதலில் கவனியுங்கள். இப்பொழுது நமக்கு வேண்டியது அத்வைதங்கூடவன்று. முதலில் அவ்வளவு வயிற்றுக்கு அன்னம் கிடைக்கட்டும்; ஞானத்தைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். நம்மவர்கள் மண்டையில் மட்டுக்குமிஞ்சின மதவிஷயங்களை ஏற்கனவே திணித்துவைத்திருக்கிறோம். அவர்களோ பாவம் பசிப்பிணியால் வருந்துகின்றனர். வயிறு பசியால் வாடும்பொழுது வேதாந்தமேறுமா! நமக்கு இரண்டு சாபங்கள் சேர்ந்திருக்கின்றன. ஒன்று நமது பலவீனம்: இரண்டாவது நமது பகைமையும், கல்நெஞ்சமும், சாஸ்திரக் கொடுமையும் ஆகும். சாஸ்திர சித்தாந்தங்கள் லக்ஷக்கணக்காயும் மதசம்பிரதாயங்கள் கோடிக்கணக்காயும் ஏற்படுத்தலாம். எவ்வளவுசெய்தும் என்னபயன்! வேதம் உங்களுக்குக் கற்பிப்பதுபோல், மற்றவர்களும் உங்கள் தேகத்தின் அம்சங்களே யென்றும், ஏழைகளும் பணக்காரர்களும் புண்ணியவான்களும் பாவிகளும் எல்லோரும் பிர்மம் என்னப்பட்ட அகண்ட பரிபூரண சொரூபத்தின் அம்சங்களே என்றும் நீங்கள் மனதார உணர்ந்து எல்லாரிடத்தும் ஜீவகாருண்யத்துடனுன் பிரவர்த்திக்கின்ற வரையில் எந்த வாசா ஞானமும் கைங்கரியமும் ஒன்றுக்கும் உபயோகப்படாது."

பார்ப்பனர் சூழ்ச்சியும் நம்மவர்களுக்கு எச்சரிப்பும்.

(திரு. கி. குப்புசாமி பிள்ளை எழுதுகிறார்.)

(சென்றவாரத் தொடர்ச்சி.)

நான்காவது சூழ்ச்சி

சென்னை மாகாணத்திலுள்ள இந்துமத பரிபாலன சட்டத்தை சீர்திருத்தவேண்டுமென்று ராஜீயவாதிகளும் நியாயாதிபதிகளுஞ் சேர்ந்து அபிப்பிராயப்பட்டார்கள். இவர்கள் கூறியதை யனுசரித்து நம்மவர்களால் இந்துமத பரிபாலன சட்டத்தைச் சீர்திருத்தும்படி கொண்டுவரப்பட்டதும், பார்ப்பனர்களெல்லாருஞ்சேர்ந்து மதம் போச்சு, மதம்போச்சு என்றகூவினார்கள். நமது மடாதிபதிகளை கைவசப்படுத்திக்கொண்டு சட்டம் செல்லாதென்று கோர்ட்டுகளில் வாதஞ் செய்தார்கள், அதிகாரிகளிடம் தூதுசொன்னார்கள். கடைசியாகச்சட்டம் நிறைவேறியது. சட்டத்தை நம்மவர்கள் நன்குகவனித்தால் பார்ப்பனர்கள்செய்யும் பிரசாரம் கெட்டசூழ்ச்சியென்று யாவருக்கும் விளங்கும். சென்னை மகாணத்தில் சுமார் பதின்மூவாயிரம் கோவில்களும், 350 மடங்களுமிருந்துவருகின்றன. இதில்ஒரு கோயிலாவது பார்ப்பனர் ஐவேசியிலிருந்து கட்டினதுமில்லை. நம்மவர்களை ஏமாற்றி பாதகாணிக்கையென்று வசூல்செய்து பார்ப்பனர் நன்மைக்காக நாலைந்து மடங்களிருந்து வருகின்றன. முன்னமே இந்துமத பரிபாலன சட்டமிருந்துவந்தது. அதில் கோயில் தர்மகர்த்தர்கள் சாசுவதமாக விருந்துவந்தார்கள். இப்போது, தேர்தல்களில் தர்மகர்த்தர்களை நியமிக்கவும், மதசம்பந்தமான செலவுகளைத் தவிர இதரவகைகளில் மடத்துக்குள்ள வருமானங்களை துர்வினியோகஞ் செய்யாமலிருக்கும்படிபாதுகாக்கவும், இவைகளைக் கண் காணிக்கவும் ஒருமத்திய சபையை ஏற்படுத்தி, சென்னை சட்டசபையினதிகாரத்திற்குள் சகலநடவடிக்கைகளும் நடந்து வரும்படிக்கு இந்துமதசட்டத்தில் சீர்திருத்தஞ்செய்திருக்கிறது. இதைக்கண்டு பார்ப்பனர்கள் கிளர்ச்சிசெய்ய நியாயமுண்டா? பார்ப்பனர்களால் நமது கோவில்களெல்லாம் பரிசுத்தத்தன்மையை இழந்துவிட்டன. நமது கோவில்கள் பார்ப்பனர்களின் விபசார விடுதியென்று சொல்வதுகூட குற்றமாகாது. பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் இந்துமதமிருந்துவருகிற நிலைமையை கவனிக்கும்போது மதசீர்திருத்தம் வேண்டாமென்று யார்தான் சொல்லக்கூடும். இந்துமத சீர்திருத்தசட்டத்தை அமுலுக்கு கொண்டுவாராதபடி நியாயஸ்தலங்களில் பார்ப்பனர்கள் சூழ்ச்சிசெய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதுவிஷயமாய் பா[illegible]களுக்குத்தக்க புத்திமதிகளை செயலில் நம்மவர்கள் காட்டுவார்களென்று நம்புகிறேன்.

ஐந்தாவது சூழ்ச்சி

இரண்டாவது சட்டசபை காலத்தில்தான் காங்கிரஸ் சுயராஜ்யகட்சிகிளம்பியது. சென்னைமகாணசம்பந்தப்பட்டவரையில் பார்ப்பனர்கள் சுயராஜ்யகட்சியின் போர்வையைப் போர்த்திக்கொண்டு சட்டசபைக்குள் தங்களினத்தவர்களை அனுப்ப வழிதேடினார்கள். நம்மவர்களுக்குள்ளும் கலகத்தை உண்டுபண்ணினார்கள். தேர்தலில் பார்ப்பனர்களுக்கு அதிக ஸ்தானம் கிடைக்கவில்லை என்று தெரிந்ததும் ஜஸ்டிஸ் கட்சியினர் மீண்டும் மந்திரி பதவிகளை வகிக்காவண்ணம் பல சூழ்ச்சிகள் செய்து நம்மவர்களுக்குள் பிளவை யுண்டுபண்ணினார்கள். சுயேச்சை மந்திரி சபை ஏற்பட்டு சில காலமானதும் பார்ப்பன சுயாராஜ்யக் கட்சியாரின் கெட்ட எண்ணங்கள் முற்றும் நம்மவர்களுக்குத் தெரிய வந்தது. சுயேச்சைக் கட்சியில் பெரும்பாலார் நம்மவர்களே யிருந்து வந்ததால் பார்ப்பனர்களின் சூழ்ச்சி பலிக்கவில்லை. மந்திரிகளுக்குள் கலகத்தை யுண்டுபண்ணி தற்சமயமிருந்துவருகிற முதன் மந்திரி மீது நம்பிக்கையில்லாத தீர்மான மொன்றை பார்ப்பனர்கள் கொண்டு வந்தார்கள். தீர்மானம் தோல்வியுற்றதும் பார்ப்பனர் சூழ்ச்சியிலிருந்த நமது மந்திரிகளிருவர் பதவியை யிழந்தார்கள். நிர்வாக சபையிலிருந்த சர் சி பி அய்யருக்குக் காலம் முடிந்தது. இவருக்குப் பதிலாக பார்ப்பனரொருவரை நியமித்தார்கள். இதைக் கண்டு நம்மவர்கள் ஆட்சேபித்தார்கள். இதன் மத்தியில் நிர்வாக சபையிலிருந்த பார்ப்பனர் ராஜீநாமாக் கொடுத்துவிட்டார். கவர்னரெண்டாரும் சூழ்ச்சிகளைத் தெரிந்து கொண்டார்கள். ஜஸ்டிஸ் கட்சியின் கூட்டுறவு அவசியமென்பதை சுயேச்சைக் கட்சியாருந் தெரிந்தார்கள். நம்மவர்களிலொருவர் சட்ட மெம்பராகவும், பார்ப்பனரொருவர் மந்திரியாகவு மிருந்துவர ஜஸ்டிஸ் கட்சியினர் சம்மதித்தார்கள். பார்ப்பனர்கள் நினைத்தபடி முடியாமற் போகவே 'இந்தியரல்லாத சைமன் கமிஷனை நம்மவர்கள் பகிஷ்கரிக்கவேண்டும்' என்றுபதேசஞ் செய்ய வந்துவிட்டார்கள். சட்ட சபையில் சைமன் கமிஷன் பகிஷ்காரத் தீர்மானத்திற்குச் சாதகமாக ஜஸ்டிஸ் கட்சியாரும் வருவார்களென்று பார்ப்பனர்கள் நினைத்தது தான் குறிப்பிடத் தக்கது. சட்ட சபையில் சைமன் கமிஷனுக்கு ஆதரவு கிடைத்ததும், பார்ப்பனர்கள் தங்களபிப்பிராயங்களை கமிஷனுக்குப் பிராமண சபை மூலமாகத் தெரிவித்துவிட்டு நம்மவர்கள் சைமன் கமிஷனைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதை யெல்லாம் நாம் கவனிக்குமிடத்து சகல வழியிலும் நம்மவர்களுக்கு விரோதமாகப் பிரசாரஞ் செய்ய பார்ப்பனர்களால் ஒவ்வொரு இடங்களிலும், பார்ப்பன ரகசிய சபைகளுண்டாக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ராஜீய பார்ப்பனர் ரகசிய கூட்டங்கள்

ராஜீய பார்ப்பனர்க ளெல்லோருஞ் சேர்ந்து நம்மவர்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக ஒரு ரகசிய சபை அமைத்திருப்பதாகவும், அதில் பார்ப்பன உத்தியோகஸ்தர்களுஞ் சேர்ந்திருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். மாகாண முழுவதும் பார்ப்பனர் ரகசிய சபையிலிருந்து வருவதுடன் தலைமை ஆபீஸ் சென்னை மைலாப்பூரிலேற்படுத்தியிருப்பதாகவுந் தெரிகிறது. சுயேச்சைஸ்தானங்களிலும் நம்மவர்களுக்கு விரோதமாகபார்ப்பனர் சூழ்ச்சிசெய்துவருகிற விபரங்களை, தற்சமயம் பெங்களூரில் நடைபெறும் கலகவிசாரணைக் கமிட்டியின்முன்பு கான் பகதூர் அபாஸ்கான் அவர்களும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்களும் சாட்சி சொல்லியிருப்பதிலிருந்து நேயர்கள் அறிந்திருக்கலாம். ஆகலால் இனி நம்மவர்கள் பார்ப்பனர்கள் விஷயத்தில் மிகவுமெச்சரிக்கையாகயிருந்து வருவதுடன், பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளை நம்மவர்களிடை யெடுத்துரைக்க பல தொண்டர்கள் முன்வரவேண்டுகிறேன். சுயமரியாதை இயக்கமானது தெய்வகிருபையால் நமக்கு கிடைத்திருக்கிறது. நாமெல்லோரு மொன்று கூடி சுயமரியாதையுடன் வேலை செய்வோமானால் பார்ப்பனர் சூழ்ச்சியைத் தவிர்த்து விடலாம். எந்தப்பார்ப்பனரையும் நம்மவர்கள் நம்பி விடலாகாது. அதிலும் ராஜீய பார்ப்பனர்களை நம்மவர்கள் கூட்டுறவு செய்து விடலாகாது. பார்ப்பனர் ரகசிய கூட்ட மொன்றிருந்து வருகிறது.

எச்சரிக்கை! எச்சரிக்கை!!

எச்சரிக்கை !!!

அறிவுச் சுடர்

(சாமி. சிதம்பரனார் எழுதுவது)

கடவுள்

1 நீ ஒரு நாளும் கடவுளைப் பற்றிக் கவலையுற வேண்டாம். கடவுள் உண்டா இல்லையா என்ற வழக்கிலும் தலையிட வேண்டாம்.

2 கடவுளைப்பற்றி வழக்கிடுவோர் ஒருவராவது உண்மைப் பொருளைக் கண்ணாரக்கண்டாரன்று.

3 கண்ணுற் காணும் பொருளைப்பற்றி உரையாடுவதில் தான் பயனுண்டு. பிறர் பால் கேட்டுணர்வதும், நூல்களிற்படித்துணர்வதும் முற்றும் உண்மை யென்று துணிந்து கொள்ளுதல்முடிந்த முடிபாகாது.

4 உனக்குத் தெரியாத பொருளைப் பற்றி நீ ஏன் வீண் பழிக்குப் பேசுகின்றாய் அதனால் உனக்கென்ன பயன்?

6 உனது ஆற்றலை நீ உணரவேண்டும். உன் ஆற்றலைப் பயன்படுத்தாமல் பிறர் உதவியையாடுவாயாயின், வரவர உன் ஆற்றல் குறைந்து உலக வாழ்க்கையில் இன்பமின்றித் துன்பத்தையே அடைவாய். இது உண்மை.

7 கடவுளைப்பற்றி ஆராயத்தொடங்குவதனால் உனது காலம் வீணே கழிகின்றது. நீ சோம்பேறியாகிவிடுகிறாய்.

8. கடவுளைப்பற்றியகவலையைத்தன்னலமுடையவர்களுக்கும், சோம்பேறிகளுக்கும் விட்டுவிடு. நீ உலகமக்கள் வேற்றுமையின்றி ஒருதன்மையான இன்பத்தை யடைவதற்கு முயற்சிசெய்.

9 கடவுள்என்பதற்'கெல்லாவற்றையும் கடந்திருப்பது' என்பதுதான் பொருள். அங்ஙனமிருக்க நீ யேன் கடவுள்மீது கவலைகொண்டு உன்முயற்சியை வீணாக்கவேண்டும்;

10 மக்கட்பிறப்பில் இன்பமே நிறைந்திருக்கிறது. அதனை அடைவதற்குத் தடையாயிருப்பது கடவுளைபற்றி உனக்குண்டாகும் கவலைதான்.

காரமடை சென்னம்பாளயம் கல்வியபிவிருத்திச் சங்கம்

விபவ ஆண்டு ஆவணித் திங்கள் 11 தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகளின் அக்கிராசனத்தின் கீழ் புதூர் திருவாளர் என் கிருஷ்ணசாமி ஆசாரியார் ஜீவகாருண்யத்தைப் பற்றியும், திருவாளர் சிக்காரல் பாளையம் மணியம் நஞ்சப்ப கவுண்டர் கல்வியைப் பற்றியும், கூர்காம் பூண்டி திருவாளர் சுப்பைய கவுண்டர் "கதர்" என்பதைப் பற்றியும், சிட்டே பாளையம் திருவாளர் கௌடப்ப கவுண்டர் மது விலக்கைப்பற்றியும் பிரசங்கம் செய்தார்கள். பிறகு ஸ்வாமிகள் முடிவுரை சொல்லி முடித்த பின்பு சந்தன தாம்பூலம் வழங்கிய பின் சபை கலைந்தது.

பிரதிவாரம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7-30 மணி முதல் 10 மணி வரைசபை கூடி வருகிறது. நம் சங்கத்தை அக்கிராசனராக இருந்து மேன்மைப் படுத்தியவர் எஸ்,பி,கண்ணப்பசெட்டியார், உதவியாயிருந்தவர் தர்மகர்த்தா மா சிவனப்பகவுண்டர். செ மா நாகப்ப வுண்டர், காரியதரிசி.

சென்னைப்புலால் மறுத்தல் சங்கம்

1928-ம் வருஷம் அக்டோபர் மாதம் 13 ந் தேதி சனிக்கிழமை மாலை 4-மணிக்குச் சென்னையில் உள்ள செங்கேயியர் வீதியில் சுப்பிரமணியம் தர்மபாடசாலையில் திரு டாக்டர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் தலைமையில் ஷை சங்க சொற்பொழிவாளர் திருவாளர் மா, சி, சிவசங்கர முதலியார் அவர்கள் புலால் மறுத்தல் என்னும்விஷயத்தைப்பற்றி உபன்னியாசம் செய்தார்கள்.

காரியதரிசி.

ரோஜா முத்தையா

பார்ப்பனரும் கடவுளும்.

இந்நாட்டின்கண் நிகழும் பிறப்பு, இறப்பு, சூரியன், சந்திரன், பஞ்ச பூதங்கள், நதிகள், கடல்கள், மலைகள் முதலியவைகளை ஆராய்ந்து பார்க்குமிடத்து இவைகளையெல்லாம் ஆண்டுவரும் சக்தி ஒன்று இருக்கிறதென புலனாகிறது.

இச்சக்தியைத்தான் பல அறிஞர்கள் "இயற்கை" என்றும், "ஜோதி" என்றும், "பொருள்" என்றும், "கடவுள்" என்றும் பலவாறாகக் கூறுகிறார்கள். அச்சக்தியான கடவுள் எங்கும் நிறைந்திருக்கின்றதென்றும், எல்லோருடைய மனதிலும் சதா குடிகொண்டிருக்கிறதென்றும், அதற்கு உருவமே கிடையாதென்றும், அதை அறிய வேண்டுமானால் தனனுடைய மனதிலேயேதான் அறியலாமே ஒழிய வேறெங்கேயும் அதைக் காண முடியாதென்றும், மனதே அதுவென்றும், ஆனந்தமே அதுவென்றும், அறிவே அதுவென்றும் சொல்லுகிறார்கள்.

அந்த அன்பாகிய சக்தியின் பயனாய்த்தான் உலகிலுள்ள எண்ணிறந்த கோடி ஜீவன்கள் சிருஷ்டிக்கப்பட்டதென்றும், அவ்வுயிர்களுள் மனித உயிரே மேன்மை பொருந்தியதென்றும், அதற்கு விசேஷமாக பகுத்தறிவு ஒன்றுகூட இருக்கிறதென்றும், இப்பகுத்தறிவின் பயனாய் இவ்வுலகில் செயற்கரிய பெருஞ் செயல்களையும் செய்து முடிக்கும் ஆற்றல் அமைந்திருக்கிறதென்றும், மனிதர்களெல்லாம் ஒரே வகுப்புதானென்றும், இதில் யாதொருவித வகுப்பு வித்தியாசமும் கிடையாதென்றும் சொல்லுகிறார்கள்.

அதை உணர்த்தும் அறிகுறியாக, கடவுள் எல்லோருக்கும் ஒன்று போலவே பொதுவாக பசி, நித்திரை, சுகம், பஞ்சேந்திரியங்களாகிய கண், வாய், மூக்கு, செவி, நாக்கு முதலியவைகள் அமைத்திருக்கிறாரென்றும், எல்லோருக்கும் பொதுவாக உபயோகப்படும்படியாக காற்று, மழை, வெய்யில், ஆகாயம், மண் முதலியவைகள் பிரசாதமாக தந்தருளியிருக்கிறதென்றும், இன்னும் உலக உயிர்கள் குறைவறப் புசிக்க உணவுப் பொருள்களும், உடுக்க ஆடைகளும், பஞ்சேந்திரியங்களால் அனுபவிக்கக்கூடிய எல்லா சுக போகங்களும், மற்றவைகளும் ஏராளமாக நிரப்பப்பட்டிருக்கிறதென்றும், எனவே இதை எல்லோரும் சமமாக அனுபவிக்க உரிமை உடையவர்கள்தானென்றும் கூறுகிறார்கள்.

மனிதனிடத்திலேயே உண்மையான கடவுளின் சொரூபம் காணக் கிடக்கிறதென்றும், உண்மையாக கடவுளிடத்தில் பக்தியிருக்குமேயாகில் நடமாடும் ஆலயங்களாகிய மனிதர்களிடத்தில் அன்பை செலுத்த வேண்டுமென்றும், தானே அதுவென்றும், அதுவே தானென்றும், பேதமில்லாமலிருக்க வேண்டுமென்றும், எல்லோருடைய பசியையும் தன் பசியாகப் பாவித்துத் தன்னாலானவரை பசியை ஆற்றிவிட வேண்டுமென்றும், அதுவே சக்தியாகிய கடவுளுக்கு அதிக திருப்தியென்றும், அதுவே கடவுளுக்கு நாம் செலுத்தும் நிறைந்த பக்தியென்றும், அதையே கடவுள் விரும்புகிறாரென்றும், எக்காலத்தும், எச்சமயத்தும், யாவரிடத்தும், பொறுமை, சாந்தம், சகிக்கும் தன்மை, பொய் பேசாமை, திருடாமை, தைரியம், சந்தோஷம், முதலிய குணங்களுடன் திகழ்ந்தால் கடவுளாகிய அருட் சக்தியின் இருபை கிட்டுமென்றும், பின் மேற்கண்ட குணங்களுடன் இருப்போரையே கடவுளென கருதலாமென்றும் கழறுகிறார்கள்.

மேற்கண்ட விஷயங்களைநோக்குமிடத்து தற்காலம் அவை மக்களுக்கு ஓர் விதத்தில் பயன்தாத்தக்கதாய்த் தோன்றுகிறது. பழந்தமிழர்கள் இத்தென்னாட்டில் இத்தர்மத்தைத்தான் அனுசரித்து வந்ததாகவும் சரித்திர மூலியமாக அறியக்கிடக்கின்றது.

இவ்வன்பு மதத்தை அனுசரித்துவந்த தமிழ்ப் பெருங்குடி மக்கள். இந்நாட்டிற்கு கூற்றுவர்களாகக் குடியேறிய ஆரியப் பார்ப்பனர்களின் சூழ்ச்சிபால்தான் அன்பும் சத்தியமும் நிறைந்த மதத்தை கைவிட்டுவிட்டார்களெனத் தெரிகிறது. இப்பார்ப்பனர்களின் நயவஞ்சகத்திற்கு அக்காலத்திய தமிழ் அரசர்களும் அதிக ஆதரவு கொடுத்து விட்டார்களெனவும் அறியக் கிடக்கிறது. அதனால் இப்பார்ப்பனர்களின் ஆகாயப்புழுகான-அநாகரீகமான-மதத்தைத் தமிழர் தழுவி விட்டார்களெனவும் தெரிகிறது.

இவ்வாரியப் பார்ப்பனர்களின் பொய் மூட்டையால் இது போழ்து இத்தமிழ்நாடு பைத்தியக்கார நாடாக நடப்பதைக் காணும் போது மனம் பதைக்கிறது. எழுத கை நடுங்குகிறது. அந்தோ! பரிதாபம்!!! பரிதாபம்!!!

இப் பைத்தியக்காரத்தனமான ஆரியக் கொள்கைகளை அக்காலத்திலேயே பல பெரியார்கள் கடிந்தும் இருக்கிறார்கள். ஆனால் அக்காலத்தில் மக்களுக்கு நாகரீகம் குறைவுபட்டிருந்ததாலும் இவ்வளவு கலபமாக சமாசாரப் பத்திரிகைகளைப் படிக்க முடியாமலிருந்தாலுமேதான் அவர்கள் அவர்கள் எடுத்த காரியம் பலிக்காமல் போய் விட்டதாகவும் தெரிகிறது.

சகோதரர்களே! இக்கட்டுரையில் தற்காலத்தில் கடவுள் தன்மை எவ்வாறு விளங்குகிறதென்பதை சிறிது கவனிப்போம். வாசகர்களாகியத்தாங்கள் இதை ஊன்றி கவனிப்பீர்களென நம்புகிறேன்.

எங்கும்நிறைந்து பிரகாசிப்பதும், தன்னிடத்திலேயே சதா குடிகொண்டிருப்பதும், உருவமே கொஞ்சமுமில்லாததுமான அறிவுக்கடவுளை இப்பார்ப்பனர்கள் மனிதனைப் போல் சிற்பியிடம்சொல்லி கல்லிலாவது செம்பிலாவது அல்லது பாஷாணத்திலாவது செய்வித்து ஓர் இடத்தில் நட்டுவைத்திருப்பதும், அவ்வுருவத்திற்கு மனிதர்களைப்போல் வசிப்பதற்கு வீடுவேண்டும், இல்லையேல் அவ்வுருவம் காற்றினாலும், மழையினாலும், வெய்யிலினாலும், கஷ்டப்பட்டு கசித்துப் போய்விடுமென்று சொல்லி மக்களிடத்தில் ஏராளமாகப் பணத்தைப் பிடுங்கி வானத்தை அளாவி நிற்கும்படியாகவும் கண்டோர் பிரமித்துப் போகும்படியாகவும் ஓர் கட்டிடமி கட்டி வைத்திருப்பதும், உயிரேகொஞ்சமுமில்லாத அந்த கல்லுருவத்திற்கு நாங்கள் சக்தியை ஏற்றி யிருக்கிறோம், அதற்குப் பாலும் எண்ணெயும், தேய்த்துக் குளிப்பாட்டினால் சுவாமி ஆரோக்கியமாக இருக்குமென்று சொல்லுவதும், அச்செம்புருவம் நிர்வாணமாகயிருக்கிறது, அதற்குபட்டு பீதாம்பரங்கள் உடுத்த வேண்டு மென்று சொல்வதும், அதற்கு உயர்ந்த நகைகள் வேண்டும் விலையில்லா மாணிக்கக் கற்கள் வேண்டும் என்று என்னிடத்தில் கனவில் சொல்லிப் போனது, அதைப் போட வேண்டுமென்று சொல்வதும், அவ்வுருவம் பசி பொறுக்க மாட்டாது வாடுகிறது, அதற்கு அறுசுவை உண்டி வேண்டும் என்று சொல்லி மக்களிடத்தில் ஏமாற்றி ஏராளமாகப் பணத்தைப் பிடுங்கி சுவாமி வீட்டிலேயே அதைச்செய்து சுவாமிக்கு வைப்பதாகவும், அது சாப்பிடுவதாகவும் சொல்லி மக்களையும் சுவாமியையும் ஏமாற்றுவதும், இப்படியே தினமும் செய்ய வேண்டுமென்பதும், அக்கடவுளுககு நம்மைப் போலவே பெண்டு பிள்ளைகளுண்டென்று சொல்வதும், அக்கல்லுக்கடவுள் தினம் தினம் சாப்பிட்டு கொழுத்துப்போய்க்கிடக்கிறது, அதற்குபெண்டு போதவில்லை, அதற்கு பல பெண்களை அவருக்கென்றே ரிசர்வு செய்துவிட வேண்டுமென்று சொல்வதும், அப்பெண்கள் பலரிடத்தில் புணர்ச்சி செய்தாலும் பாதகமில்லை, அவர்களை தேவடியர்கள் என்று கூப்பிட வேண்டுமென்று சொல்வதும், இவையெல்லாம் சுவாமிக்கென்று சொல்லி பாமரமக்களிடத்தில் அநியாயமாகப்பணத்தைப்பிடுங்கி மேற்சொன்னபாலையும், வெண்ணெயையும், அறுசுவைஉண்டியையும், நகைகளையும், பட்டுபீதாம்பரங்களையும், பணங்களையும், இன்னும் தனக்குஎன்னென்ன வேண்டுமோ அவையெல்லாவற்றையும் ஏராளமாக மூட்டைகட்டிக்கொண்டுபோய் தானும்தன்சுற்றத்தாரும், பெண்டுபிள்ளைகளும் வயிறுகொழுக்கச் சாப்பிட்டுவிட்டு சோம்பேறிகளாகச் சுகலீறிப்போய் கடவுளுக்கென் ரிசர்வுசெய்துள்ள வேசியர்வீட்டில் தான் ரிசர்வுசெய்து கொள்வதும், அவர்களுக்கும் மேற்கண்டவைகளைக் கொண்டுபோய் கொடுப்பதும், அவ்வுயிரில்லா உருவத்திற்கு மாமன் உண்டு மைத்துனன் உண்டு மற்றபந்துக்களெல்லாம் உண்டு என்று சொல்லி அவர்களுக்கும் அப்படியே செய்யவேண்டுமென்பதும் அக்கடவுள்களுக்கு செலவுக்குப்பணங்கள் வேண்டுமென்று சொல்வதும், இத்திருட்டுத்தனமான தொழிலைச் செய்து சோம்பேறிகளாக வாழ எல்லாபார்ப்பனர்களையும் அங்கே கொண்டுபோய் நிரப்புவதும். அச்செம்புக் கடவுளை பல்லக்கு விமானங்களில் வைத்து மேளதாளத்துடனும், பூச்சக்கர குடைகளுடனும், வெஞ்சாமரவிசிறிகளுடனும், பல வேசியர்கள் நடனத்துடனும், ஜனங்களும் பல்களுடனும், ஊர்வலம்வந்தால் சுவாமி மிகசந்தோஷங் கொண்டு மோக்ஷங்கொடுப்பாரென்பதும் எவ்வளவு திருட்டுத்தனமும், பைத்தியக்காரத்தனமும், முட்டாள்தனமுமான தென்பதை நீங்களே யோசித்துப்பார்க்கும்படி வேண்டுகிறேன்.

இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

நான் கண்டறிந்த உண்மை.

ஸ்ரீ இங்கர்சாலின் சொற்பொழிவு.

திரு. சௌரிராஜன் மொழிபெயர்த்தது.

(முன் தொடர்ச்சி)

நான் சொல்லியவைகளெல்லாம் உண்மையானவைகளென்றே எனக்குப் படுகின்றது. சுதந்திர வாழ்க்கையை விட அடிமை வாழ்வு சிறந்ததென்று யார் சொல்லுகிறார்களென்று நீங்கள் கேட்கலாம். அவர்கள் யார் என்பதை நான் சொல்லுகிறேன்.

மதத் தலைவர்களும் மத குருக்கள்களும் வேதம், கடவுளால் தங்களுக்கு கொடுக்கப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அதை ஒவ்வொருவரும் யோசித்து நம்பவேண்டுமென்று அவர்கள் கட்டாயப் படுத்துகிறார்கள். அவர்கள் "படித்து நம்பு, அல்லது அழிந்துபோ" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுவது எவ்வளவு பொருந்தாததாயிருந்தாலும், ஆபாசமாயிருந்தாலும் நீங்கள் அதை நம்ப வேண்டுமாம். தண்டனை என்ற பயத்துடனேயே நாம் அவைகளை வாசிக்கிறோம். ஒரு பக்கம் கையில் வாளேந்திய வண்ணமாய் பிசாசுகள் நிற்கின்றன. மற்றொரு பக்கம் குற்றம் கண்டுபிடித்து சபிக்க கடவுள் காத்திருக்கிறார். சட்டங்கள் எவ்வளவு கொடுமையாக விருந்தாலும் அதை நீங்கள் மனமார நம்பவேண்டுமாம். ஏழை மக்களைப்பார்த்து குருக்கள்கள் "நீங்கள் வேதங்களை வாசிக்க வேண்டாம். அதை நீங்கள் அறிந்துகொள்ள முடியாது. ஆதலின் நாங்கள் சொல்லுவதை நீங்கள் நம்புங்கள்" என்று சொல்லுகிறார்கள். இதுதான் கடவுளாலும், மதத்தாலும் நமக்கு அளிக்கப்படும் சுதந்திரம்! ஒவ்வொரு மதமும் ஆராய்ச்சியை வெறுத்து நம்பிக்கையை ஆமோதிக்கின்றது, நம்பிக்கையே சிறந்த குணமென்று ஒவ்வொரு மதமும் செப்புகின்றது. இவைகளுக் கிடையில் ஆலோசனைக்கென்ன மதிப்பிருக்கும்?

மாடமாளிகையும் கூடகோபுரத்தையும் தன்னிடத்து வைத்துக்கொண்டிருக்க வேண்டிய மனமானது கடவுள்பாலுள்ள நம்பிக்கையால் ஒன்றுமில்லாத பாலைவனமாகி விடுகிறது. இவ்வளவு மட்டும் அல்ல. நம்பவேண்டு மென்பதற்கு மதம் நரகத்தை மட்டும் காட்டுவதில்லை. மோட்சத்தையும் நினைப்பூட்டுகின்றது. நம்பாதவர்களை மதம் நரகத்தைக் காட்டி மிரட்டுகிறது. அஞ்சா நெஞ்சுடையவர்களை மோட்சமாகிய லஞ்சத்தைக் கொடுத்துத் தன் பக்கம் சேர்த்துக் கொள்ளுகிறது. மதம் பயத்தால் மிரட்டுகிறது, மிஞ்சினால் கெஞ்சுகிறது.

மதத்தை அறிவுள்ளவர்களும் போற்ற வேண்டுமென்றால், அது உலக உண்மைகளை எடுத்து உரைக்க வேண்டும். அது பயத்தாலும், அதிகாரத்தாலும், நம்பிக்கையாலும் தன்னுடைய கொள்கையைப் பரப்பக்கூடாது. அறிவின் உதவியால்தான் மதம் நிலைநிற்க முடியும். ஐம்புலன்களும் ஒன்று சேர்ந்து ஆராயக் கூடிய சுதந்திரத்தை அது மனிதனுக்குக் கொடுக்க வேண்டும். ஆனால் மதம் கண்மூடித்தனமாக "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்று கத்துகிறது. கடவுளை நம்பாவிட்டால் ஒருவனுக்கு மோட்சமே கிடையாதாம்! நம்பிக்கைக்குப் பரிசு மோட்சம்! நம்பிக்கை எப்பொழுதும் உண்மையின் பலனாக இருக்க வேண்டும். எதிர் காலத்தில் தருவதாக வாக்களிக்கப்படும் பரிசு உண்மையல்ல. அது அறிவிற்குகந்ததாயில்லை. அது ஸ்திரமான கோட்பாடுகளை உண்டாக்குவதில்லை. நம்பிக்கைக்குப் பரிசளிப்பது நல்ல செய்கையா? உத்தியோகஸ்தனுக்கு லஞ்சம் கொடுப்பது குற்றமானால் நம்பிக்கைக்கு பரிசளிப்பது எப்படி நல்ல செயலாகும்? ஆதலின் லஞ்சம் கொடுப்பதும், லஞ்சம் வாங்குவதும், லஞ்சம் கொடுப்பதாகச் சொல்லுவதை நம்புவதும் யோக்கியமான செய்கையல்ல. ஆதலின் கடவுள் நம்பினோரை மட்டும் காப்பாற்றுவது லஞ்சம் கொடுப்பதாகும். பொய்ச்சாட்சி சொல்லத் தூண்டும் செயல்களில் இது ஒன்றாகும். லஞ்சத்திற்காக ஆசைப்பட்டு ஆலோசியாமல் ஒரு காரியத்தைச் செய்பவன் குற்றவாளியாவான்.

நான் பூமியின் மத்தியில் மிகப்பெரிய வைரப்பாறை ஒன்று இருக்கிறதென்று சொல்லுகிறேன். இதை யார் நம்புகிறார்களோ அவர்களுக்கு ஆயிரம் பவுன் தருவதாகவும் சொல்லுகிறேன். ஆயிரம் பவுன் தருவதாகச் சொல்வதினால் வைரமிருக்கிறதென்று எண்ணி நீங்கள் தேட முயலுவீர்களா? வைரமிருப்பதற்கு ஆயிரம் பவுன் கொடுப்பதா சான்று. அறிவில்லாதவர்களும் பணப்பேராசை கொண்டவர்களும் பணம் தருவதாகச் சொல்வதனால் இதை உண்மை என்று நம்புவார்கள். இதேபோல நரகமோட்சம் உண்டென்றும், அதுவே கடவுள் ஒருவர் இருப்பதற்கு சிறந்த சான்றென்றும் கூறப்படுகிறது. உண்மையான மனிதனை நம்பச்சொல்லும்பொழுது காரணம் என்னவென்று கேட்கின்றான். அதற்குத் தக்கபதில் ஒன்றும் கிடையாது. ஆனால் உண்மையான மனிதனொருவன் உங்களைச் நம்பச் சொல்லும்பொழுது தக்க காரணம் காட்டுகின்றான். இது மட்டுமல்ல.

மதம் [illegible] நம்பாதவர்கள் அநேகமிருக்கிறார்கள். ஆதலின் மதம் மற்றொருபடி மேல்சென்றது. மதம் நம்பாதவர்களைப் பார்த்து "கடவுள் உங்களை இவ்வுலகத்திலும் தண்டிப்பார்" என்று கூறுகிறது. இச்சட்டத்தை மதம் செய்த உடனே நம்பாதவர்களெல்லாம் கொடுமையாக தண்டிக்கப் பட்டார்கள். இவைகளெல்லாம் மதவெறிபிடித்தமூடர்களால் நரகமோட்சத்திலுள்ள நம்பிக்கையால் செய்யப்பட்டன. அநேக ஆண்டுகளாக குருக்கள்களெல்லாம் இரக்கமென்பதே இல்லாமலிருந்தார்கள். தோல்வியுற்றகாலத்தில் அவர்கள் பதுங்கிக்கிடந்தார்கள். வெற்றி பெற்ற காலத்தில் அவர்கள் கொலை செய்தார்கள். ஆனால் இப்போது அவர்கள் அவ்வளவு கொடுமையாகவிருக்கவில்லை. அவர்கள் தங்களுடைய ஆதிக்கத்தை இழந்துவிட்டார்கள். இருந்தாலும் முடியாத ஒன்றை முடித்துவிட! அவர்கள் முயலுகின்றார்கள். "கோடீஸ்வரன்" என்று எழுதப்பட்டகாகிதத்தைத் தங்கள் பையில் போட்டுக்கொண்டு அவர்கள் தங்களை பணக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். மூடநம்பிக்கையைத் தங்கள் மனதில நிரப்பிக்கொண்டு தங்களை அறிவாளிகளென்று சொல்லிக் கொள்ளுகின்றார்கள். மோட்சத்தை நினைத்துக்கொண்டு தங்களுடையமனதை அவர்கள் சமாதானம் செய்து கொள்ளுகின்றார்கள். அதிபதியாகிற கடவுள் ஒருவரைஉண்டாக்கி அவர்கள் மனிதர்களை அடிமைப்படுத்த முயலுகின்றார்கள். ஆதலின் அவர்கள் அடிமைக்குணங்களையே போதிக்கிறார்கள். ஆண்மையாயுள்ளவர்களின் தைரியத்தை அவர்கள் வெறுக்கிறார்கள். ஆராய்பவர்களை அவர்கள் அழித்துவிடமுயலுகின்றார்கள். (தொடரும்)

சந்தாதாரர்களுக்கு

அறிவிப்பு.

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறு வருஷத்திற்கு சந்தா அனுப்பும்போதும், வேறு ஆவலாதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரை சந்தா நம்பர் என்று நினைத்து அந் நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தாநம்பர் என்பது சந்தாதாரரின் விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர்

கருணீகர் மூன்றாவது மாகாண மகாநாடு. சித்தூர்.

ஷை மகாநாடு சித்தூரில் நடைபெறும். கோடைகாலத்தில் தண்ணீர்க்குறைவு, வெய்யில் மிகுதி, ஸ்கூல் பரீக்ஷைகள், ஜமாபந்தி ஆகிய கஷ்டங்களிருப்பதால் டிசம்பர்-௴ கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களிலேயே மகாநாடு கூடுதல் நலமென்று உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. நமக்குள்ள எல்லாக்குறைகளையும் எடுத்துக்காட்டவும், நாம் சீர்திருந்துதற்கும் ஏற்ற வழிகளைக்காண ஏற்ற சந்தர்ப்பம் மகாநாடுகளில்தான் உண்டாகும்.

ஆகவே கருணீகமரபிற்றோன்றிய ஒவ்வொருவரும் அன்புகூர்ந்து தம்மாலாய துணை செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

வரவேற்புகமிட்டி அங்கத்தினர்கள் ரூ. 5 க்குக்குறையாமலும் டெலிகேட்டுகள் ரூ. 2-க்கு குறையாமலும், விசிட்டர்கள் ரூ. 1-க்கு குறையாமலும் செலுத்தவேண்டும்.

வரவேற்பு கமிட்டி மெம்பர்கள் 1928-௵ நவம்பர்-௴ 5-௳க்குள்ளும், டெலிகேட் மெம்பர்களும் விசிட்டர்களும நவம்பர்-௴ 30-௳க்குள்ளும் பணம் செலுத்தவேண்டும்.

கருணீக இளைஞர் இரண்டாவது மகாண மகாநாடும் இவ்வமயம நடைபெறும்.

சி. [illegible] பிள்ளை, காரியதரிசி,

கிருஷ்ணன் கடவுளா?

வியாசர், துருவாசர், ரிஷிகளா? எல்லாம் பார்ப்பனர் சூழ்ச்சி-

ஓர் "சௌராஷ்டிர மணி" எழுதுகிறார்.

மக்களாய்ப்பிறந்தவர்கள் எதாவது ஒருதொழில் செய்து ஜீவனம் பண்ணவேண்டும். சுயஉணர்ச்சியும், கௌரவமும், உள்ளவர்கள் வேளாண்மை, வாணிபம், சிற்பம், முதலிய கைத் தொழில் அல்லது உத்தியோகம் செய்து ஜீவிப்பார்கள்- மற்றும் சிலர் முன்னோர் தேடி வைத்தமூலதனத்தைக் கொண்டு வியாபாரம் செய்கிறார்கள். கைத்தொழில் செய்ய மனமற்றவர்களும், சக்தியில்லாதவர்களும் பிச்சையெடுத்து உண்பார்கள்- அப்படியும் முடியாத மடியர்கள் வழிப்போக்கர்களை தனி வழியில் கொள்ளையிடுகிறார்கள். சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு இந்தியாவில், பிண்டாரியர் என்றும் தக்கர் என்றும் கொள்ளைக்கூட்டத்தார் வழிப்போக்கர்களையும், பணக்காரர்களையும் கொள்ளையடித்து ஜனங்களை இம்சை படுத்தினார்கள். ஆனால் அவர்களை நம்முடைய கவர்மெண்டார் அடக்கிவிட்டு நாட்டுக்கு அமைதி அளித்தனர். ஆனால் அந்த தீவட்டி கொள்ளைக்காரர்களை விட பன் மடங்கதிகமானவர் இப்பொழுது நம் நாட்டில் இருக்கின்றனர்.

அவர்கள் பகல் கொள்ளைக்காரப் பார்ப்பனர்களே- இவர்களுக்கு யாதொரு பயமுமில்லை; இவர்கள் நான்கு ஜாதியில் உயர்ந்தஜாதி என்று சொல்லிக்கொண்டும் கடவுள்பேரைச்சொல்லியும் மதத்தின் பேரைச் சொல்லியும், மற்றய மூன்று ஜாதியாரிடமும் பகலில் கொள்ளை அடிக்கின்றார்கள். பஞ்சாங்கப் பார்ப்பானுக்கு ஆயுள் முழுதும் இறந்த பின்னும் தக்ஷணை கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டியது தான். அவர்கள் "சிவனுடைய விந்துவிலிருந்து பொன் உண்டாயிற்று. அதை சிவனுடைய முகத்திலிருந்து வந்த பிராமணர்க்குக் கொடுத்தால் விசேடம்" என்று சொல்லி மயக்குவார்கள்- "பார்ப்பனர்களுக்கு ஒரு குடும்பத்தார் ஒரு வருடத்தில் கொடுக்கும் கட்டளையில் நூறில் ஒரு பங்காவது ராஜாங்கத்துக்கு வரிப்பணமாக கட்டுவதில்லை" (மேயோ) என்றால் பார்ப்பனர்கள் திதி, சிரார்த்தம், சமக்கிரியை, கலியாணம் முதலியவைகளில் எவ்வளவு பணம் பிடுங்குகின்றார்கள் என்று யோசித்துப் பாருங்கள்.

நம் தென்னாட்டு, நாட்டுக் கோட்டை செட்டிமார்களும், சிற்றரசர்களும், தனவர்தர்களும் கட்டி வைத்த கோயில்களில் உள்ள கற்சிலைகளை தொழ நமக்கு உரிமையில்லை யென்பர் ஆரியப் பார்ப்பனர். நம்முடைய குறையை கடவுளிடம் சொல்ல குருக்களுக்கு கூலி கொடுக்க வேண்டு மென்பர். இதை ஸ்ரீரங்கம், சிதம்பரம், திருவானைக்கா முத முதலிய இடங்களில் நேரில் கண்ட அன்பர்களே தெரிந்து கொள்ளக் கடவர்.

இதை விட பெரிய நாணயக் கொள்ளையடிக்கும் பார்ப்பனர், பூதானம், கோதானம், ஸ்வர்ண தானம், வஸ்திரதானம் கேட்பார்கள்- மேலே சொல்லிய எல்லோருக்கும் தலைவர்கள், மதம் கொண்டமதாச்சாரியர்கள் தங்களைலோககுருவென்று சொல்லிக் கொள்ளுவார்கள்- இவர்கள் மூடஜனங்களையும் முன் காலத்து மூட அரசர்களையும் தம் கைக்குள் அடக்கிக் கொண்டு செய்யாத அட்டகாசங்களை செய்து வந்தார்கள், செய்தும் வருகிறார்கள்-

பேதை மக்கள் தங்களுக்கு நரகம் கிட்டும் என்று சொல்லி பயந்து அவர்கள் செய்யும் கொடுமைகளை யெல்லாம் சகித்துக் கொண்டு வந்தார்கள்- அறிவுடையவர்கள், மதாசாரியர்கள் செய்கைக்கு மாறு சொன்னால் அவர்கள் பாடு திண்டாட்டம்- உண்மை ஆராய்ச்சி செய்தவர்களை ஆசாரியர்கள் அரசர்கள் உதவியால் கொடூர தண்டனைக்குட்படுத்தியிருந்தார்கள்- உதாரணமாக விக்ரக ஆராதனையை இகழ்ந்து ஜீவகாருண்யத்தை மேற்கொண்ட 8000 சமணர்களை ஒரு பிராமணராகிய ஞானசம்பந்தர் கழுவிலேற்றினார்- அந்தோ கொடிது! இவர்கள் மதி இருந்தவாறு என்னே!

முன்னாளில் அரசர்களையும் பேதை மக்களையும் மயக்குவதற்கு, பார்ப்பனர்களுக்குச் சாதகமானவைகள், புராணங்களும், பொருளைச் செலவிட்டுக் கட்டிய கோயில்களும் தான்- ஆகாயமளாவிய உபயோகமற்ற கோபுரங்களையுடைய கோயில்கள் பார்ப்பனர்களுக்கு கோட்டைகள் போல் உதவுகின்றன. அதனுள் இருக்கும் சிலைகள் அவர்களுக்கு சோறும், வஸ்திரமும், விபசாரி முதலிய எல்லா சுகங்களையும் தருகின்றன- மற்ற மூன்று வருணத்தார்களுக்கும் அதனால் உண்டாகும் பலன்களை யாம் அறியக்கிடக்கிலோம்!

இற்றைக்கு ஐந்து ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் மேல் நாட்டில் பேரன்ஸ் (Barons) என்னும் பிரபுக்கள் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு பிரஜைகளைத் துன்புறுத்தி வந்தார்கள்- கிருஸ்தவ குருமார்கள் கூட இம்சை செய்து வந்தார்கள்- தற்காலத்தில் அவர்கள் கர்வம் அடங்கி ஜனங்கள் சுகமடைந்திருக்கிறார்கள். ஆனால் இப் பார்ப்பனர்கள் நாம் கட்டிக் கொடுத்த கோவிலாகிய கோட்டையைப் பற்றிக்கொண்டு நம் ஜனங்களுக்கு ஹிதம்செய்வதுபோல் பாவனைசெய்து பொருள் பறிக்கிறார்களேயொழிய வேறு பிரயோஜனம் ஜனங்களுக்கு கிடையாது. திருவிழாக் காலங்களில் ஊர் விட்டு ஊர் சென்று தங்க இடமில்லாமலும், சரியான உணவு கிடைக்காமலும் பணத்தையும் அருமையான காலத்தையும் வீண் விரயம் செய்வது தான் நாம் கண்டது- லாபம் கண்டது பார்ப்பனர்கள்.

இக் கொள்ளைக்காரப் பார்ப்பனர் கர்வம் அடங்கி மற்றையோர் சுக வாழ்வு அடையும் நாள் நெருங்கி விட்டது- சுயமரியாதைச் சூரியன் உதித்து விட்டது- பயமில்லை சுயமரியாதைக் கொள்கைகள் செழித்தோங்க அவர்கள் பலம் குறையும்.

பார்ப்பனர்கள் என் செய்தார்கள்! ஆதியில் வியாசன் போன்ற ரிஷிகள் என்பவர்கள் புழுகுப் புராணங்களை யெழுதி ஜனங்களின் புத்தி கூர்மையையும் உண்மை அறிவையும் மழுங்கச் செய்து விட்டார்கள்- அதைக் கொண்டு நம் பேதை மக்கள் முக்தியடையவும், பிதுர்க்களை மோக்ஷத்திற்கு அனுப்ப வேண்டியும், நரகத்திற்கு பயந்தும், இவ்வித மூடக் கொள்கைகளைக் கைகொண்டு, புராணங்களில் பார்ப்பனன் எழுதிவைத்தபடி, பொருள்களை பராதீனம் செய்து பார்ப்பனருக்கு எல்லா வித தானங்களும் தருமங்களும் செய்யலானார்கள்; செய்தும் வருகிறார்கள்- அவைகளைக்கொண்டு பார்ப்பனர்கள் சுகம் அடைகிறார்கள்- ஏழைகள், மூடவர், நொண்டி, குருடர் இவர்களுக்கு ஏதாவதொரு பிரயோஜனமுண்டா!

ஆனால் பாவம் தென்னாட்டவர்கள் என் செய்வார்கள்! புராணங்களில் எழுதியுள்ள-பார்ப்பானுக்குச் செய்த-தானங்களினால் உண்டாவதாகச் சொல்லும் பலனையும், செய்யாததினால் கிட்டுவதாகச் சொல்லும் நரகங்களையும் படித்து பயந்து மயங்கிவிட்டார்கள்- புத்தியும் மழுங்கி, "நான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என ஒரே மூடக்கொள்கையுடன் இருக்கின்றார்கள்-

பகுத்தறிவுடைய நேயர்களே! தயவு செய்து புராணங்களைச் சற்று ஆராய்ந்து வாசித்துப் பாருங்கள். இந்த கட்டுக்கதைகளைக்கண்டுமிரண்டு விடவேண்டாம்! சுய உணர்ச்சி கொண்டு உண்மையை ஆராய்ந்தால் அதில் சொல்லிய படி உங்களுக்கு நரகம் கிட்டிவிடும் என்று பயம் வேண்டாம். ஆங்கில ராஜ்யத்தில் உண்மையை ஆராய்ந்தால் மதாச்சாரியர்கள் முன்போல் வால் ஆட்ட முடியாது. வைக்கம் வீரர்உபபலமிருக்கமக்கென்ன பயம!

இனி வியாசபாரதத்தில் அனுசாசனிக பர்வத்தில் கிருஷ்ணன் பூதேவர் மகிமையைப் பற்றிச் சொல்லியதைதை ஆராய்வோம்-

கிருஷ்ணன் சொல்வதாவது:—

"ஐசுவரியம், தி[illegible]ம், பலம், ஆண்மை, மக்கட்பேறு, கல்வி, ஞானம், முதலியவைகள் வேண்டியவர்கள் பிராமணனைத்தொழுவார்கள். அப்படி அல்லாதவர்கள் நாஸ்திகர்கள், வேதங்களையும், புராணங்களையும்,சாஸ்திரங்களையும்இகழ்வார்கள்"

நம் மக்கள் இதை நம்பிப் பல இடங்களிலும் பாராயணம் செய்து பலருக்குத் தெரியும்படி விளம்பரம் செய்கிறார்கள்- பேதை மக்கள் மூட நம்பிக்கையுடன் புராணங்களில் சொல்லியபடி பார்ப்பனர்களுக்குத் தான் தானம் செய்வார்கள்- 18 பர்வங்களிலும் இதே தாத்பரியம்தான் திருப்பித் திருப்பி வற்புறுத்தப் பட்டிருக்கின்றது- சற்று ஆலோசித்துப் பார்ப்பவர்கள் இக் கொள்கைகளை விட்டு கஷ்டப்படும் நம் ஏழை மக்களுக்கு உதவி செய்வார்களாக!

தவிர மகா கோபியாகிய துர்வாச ரிஷி கிருஷ்ணன் வீட்டில் சில நாள் தங்கி இருந்தான்- ருக்மணியும் கிருஷ்ணனும் அந்தப் பார்ப்பனனுக்கு பணிவிடை செய்து வந்தார்கள்- துருவாசன் தன் இஷ்டப்படி தின்றுவிட்டு காளை மாடுபோல் திரிந்துகொண்டு இருந்தான். பகலில் பஞ்சணையில் படுத்துக் கொண்டு பண்ணுவதெல்லாம் பண்ணுவானாம்- ஒரு நாள் பாயசம் பாதி சாப்பிட்டு விட்டு மற்றப் பாதியை தன் உடம்பில் பூசச் சொன்னான். அவன் ஆடையை அவிழ்த்து, மூலஸ்தானம் முதல் எல்லா இடங்களிலும் ருக்மணியும் கிருஷ்ணனும் பாயசம் பூசினார்கள்- ஆண் பெண் என்று பாராமல் அப்படியே தெருவில் ஒரு விமானத்தில் ஏறிக்கொண்டு கிருஷ்ணனையும் ருக்மணியையும் இழுக்கச் செய்து ஊர் எல்லாம் சுற்றினான். நடுவழியில் ருக்மணி மூர்ச்சித்து விழுந்தாள். விபூதி தூவி அவளை எழுப்பினான் வியாசன். பிறகு வீடு வந்து சிம்மாசனத்தில் உட்கார்ந்தபடி தம்பதிகளின் பணிவிடைக்காக அவர்களுக்கு முக்தி கிடைக்கும் என ஆசீர்வாதம் பண்ணிப்போனான். ஆனால் கிருஷ்ணன், காலில் பாயசம் பூசாததினால் அங்கு அடிபட்டு இறப்பான் என்று சொல்லிப்போனான்.

அன்பர்களே இதில் துருவாசன் செய்த மானக்கேடான காரியத்தைப் பாருங்கள். பிச்சைக்காரப் பார்ப்பனனுக்கு ராஜ போஜனமும் பஞ்சணையும் ஏன்? கொஞ்சமாவது மானம் இருந்தால் ருக்மணியைய தன் நிர்வாண உடம்பில் பாயசம் பூசச் சொல்லுவானா? நாம் கடவுளென்றும் லோக மாதா என்றும் கொண்டாடும் கிருஷ்ண ருக்மணிக்கு துருவாசன் சொன்னபடி செய்ய எப்படித்தான் மனம் வந்ததோ? இக்கதையை ஆதாரமாகக்கொண்டு நம்மவர்களில் சிலரை நம்பூதிரிப்பார்ப்பனர்கள் இம்சை செய்கிறார்கள்-ஒரு பார்ப்பனன் இவர்களுக்கு மோட்சம் கிடைக்கட்டும் என்று ஆசீர்வதித்தான் என்று சொல்லியிருக்க, கிருஷ்ணனும் ருக்மணியும் கடவுள் ஆவார்களா? அவர்களே கடவுளாயிருந்தால் மற்றொருவன அவர்களுக்கு முக்தி யளிப்பதற்கு என்ன காரணம் இருக்கின்றது என்று யோசித்துப் பாருங்கள். மூட நம்பிக்கையில் அகப்பட்டுக்கொண்டு பார்ப்பன அடிகளே தஞ்சம் என உழலும் சௌராஷ்டிர சகோதரர்களே எழுமின்! சுயமரியாதை செழித்தோங்க உதவிபுரிமின்! பார்ப்பனரைக் கைவிடுமின்! சுயமரியாதையைக் கடைப்பிடிமின்!

கொடைக்கானல் ரோட்டில் கொள்ளைக்கூட்டத்தாரின் முற்றுகை பிறவிடங்களிலும் முற்றுகையிட முஸ்தீப்பு.

சுயமரியாதைக் காவலர்களே எச்சரிக்கை! எச்சரிக்கை!?

சூரியரல்லாத சீரிய வீரர்காள்! வல்லரசுக்கெல்லாம் வல்லரசாம் ஆங்கில அரசாங்கத்தின் அரசாட்சியின் கீழ் வதியும் நம் தாய் நாடாம் தமிழ்நாட்டின்கண் கொள்ளைக் கூட்டம் யாண்டுதென யான் தந்துள்ள தலையங்கள் கண்டதும் பீதியுறலாம். "வெள்ளைக்காரர் ஆட்சியில் கொள்ளைக்காரர் ஆட்டமுமுண்டோ" என வழங்கும் நாட்டுப் பழமொழிக் கொப்ப தம் பசிப் பிணி தணிக்க வேறு வகை யறியாது இராக்காலங்களிலோ, வேறு தனித்த இடங்களிலோ தட்டிப் பறித்து அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டோடும் கொள்ளைக் கூட்டங்களைத் திருத்தி மக்கள் நலங் காத்த சமதரசாங்கமானது அன்றுதொட்டின்றுவரை மூட பழக்க வழக்கங்களாலும் வேதம், புராணம் என்ற வெற்றேடுகளின் துணையாலும், மக்கள் பிறந்திறந்து பிணமாகிய பின்பும் உள்ளதுரியதெல்லாமுறுஞ்சி, நம் மக்களை அன்னகாவடிகளாக்கிவரும் ஆரியப் பூரியராம்- பார்ப்பனப் பகல் கொள்ளைக்காரர்களைப பற்றி வாளாக்கிடப்பதென்னையோ? இவற்றிலிருந்து, யான் தந்துள்ள தலையங்கக் கொள்ளைக் கூட்டம் யாதென்பது தெளிவுபட்டு பீதியறலாமன்றோ?

தமிழன்னையின் தவச் சேய்காள்! யானெனது சொந்த நலத்தின் பொருட்டு என் பிறப்பூராம் திருமலாபுரம் விட்டு திண்டுகல் செல்ல மோட்டார் ரதமேறி கொடைக்கானல் ரோடு எனும் அம்மயநாயக்கனூர் வந்திறங்கி காலைக்கடன் முடிக்கக் கருதி மதுரைமா நகர் செல்லும் பாட்டை வழியாய்ச் சென்று கொண்டிருக்கையில் அவ்வம்மய நாயக்கனூருக்கு தெற்கே சுமார் ஒரு மைல் தூரத்திலிருந்து பெரும்பாலும் மலையாள தேயத்து தேங்காய் போன்ற மண்டையும், அத்தேங்காயின் குடும்பி யொத்த கூந்தலும், மீசையைக் களைந்த முகமும், நின்று கொழுத்துச் சரிந்த தொப்பையும், வெண்குட்டை சரீரமும், அதில் முப்புரிநூல், வெண்மைச் சாம்பல், உத்ராக்கம் அணிந்த ஒரு கூட்ட ஆசாமிகளும், நடுவில் நம் மக்கள் அநேகரால் சுமந்து வரப்பட்ட சுமை வாகனமொன்றும் அதி ஆடம்பரத்தோடு அந்நகரை நாடி வந்தது- அதென்னவென சற்று நின்று நோக்க சங்கராச்சாரியும் அவரினத்துச் சீடர்குழாங்களும், மெய்காப்பாளரும் புடை சூழ வருவதாக அறிந்தேன்- பின்னர் அது அம்மயநாயக்கனூர் பெருமை மிகு ஜமீன்தாரவர்களால் வழிப் போக்கர் நலங்கொண்டாக்கப்பெற்ற சத்திரமெனும் விடுதியில் காலை 7 மணி சுமாருக்கு வந்திறங்கி யாவரும் சிற்றுண்டி அருந்தியவுடன் சற்று கட்டையும், நிதானமாய்ப் படிந்த தொந்தியும், மீசையில்லா முகமுமாய், காவியுடை யுடுத்தி அதனுமேலே முக்காடிட்ட ஒருவர் ஓர் சிறிய ஆசனத்திலமர்ந்தார்-

இவ் வைபவங்கள் இறுதியுற்ற சுமார் ஒருமணி நேரத்திற் கப்பால் மோட்டார் வாகனமொன்று அதிவேகமாய் சங்கராச்சாரியார், கொலுவிற்றிருக்கும் சத்திரமெனும் விடுதி முன்வந்து நின்றது அவ்வாகனத்தினின்று, நரை சற்றுமில்லா நாலும் புத்தோலுமே மீந்துள்ளதுபோன்ற மேனியுடைய வரும் அரையில் வெள்வாடை அணிந்து அதற்கு மேல் பச்சை நிறப் பட்டுவஸ்தி ஒன்றை இறுகப் பிணித்து ஊன்றுகோலொன்றை ஏந்தித் தாங்கியோருமாகிய சுமார் 80,85 வயதுள்ள ஓர்வயோதிகரும், சுமார் 30 வயதையுடைய ஓர் அம்மையும் 10 வயதுள்ள பெண்மகவொன்றும் வேறு இருவருமிறங்கினர்- அவர்கள் சங்கராச்சாரி வீற்றிருந்த ஆசனத்தினருகில் சென்று சாஷ்டாங்கமாய், விழுந்து எழுந்து வாய் பொத்தி கை கூப்பி நின்ற காட்சியானது சங்கராச்சாரியின் வாய்மொழியில் கவலை கொண்டவர்களாகத் தோன்றிற்று- அப் பெரியாரும் அவருடன் வந்த அம்மையும் பெண் மகவும் எவரென, அங்குள்ளாரிடம் விசாரிக்க, அப் பெரியார் அம்மயநாயக்கனூரை அரசாளும் ஜமீன்தாரவர்களென்றும் அவ்வம்மை அப் பெரியாரின் வாழ்க்கை நலத் துணைவி என்றும், அப் பெண்மகவு அவர்கள் தம் அருந் தவச் செல்வி என்றும் செப்பிய வார்த்தைகள் என் காதுகளில் நாராசத்தைக் காய்ச்சி யூற்றியது போலிருந்ததுடன் இடியோசை கேட்ட நாகம்போலும் ஒன்றுந் தோன்றாது தியங்கி விட்டேன்- பிரமை நீங்கியதும் நாடாண்ட நாயக்கர் பரம்பரையும் இவ்வம்மைநாயக்கனூரை அரசாளும் அரசுமாகிய பெரியார், நம்மை இகழ்ந்திடும் பார்ப்பனப் பகற்கொள்ளைத் தலைவராகிய- நம் பேரப் பிள்ளையை யொத்த-சங்கராச்சாரியின் அடியில் தம் சிரம்பட வணங்க முன்னணி சென்றவாறென்னே எனக் கேட்க,

"ஐயா, இங்குள்ளார் பலர் நம் வைக்கம்வீரமூர்த்தி நாயக்கர் பெருமானின் குடி அரசால் மூட பழக்கவழக்கங்களினின்று விடுபட்டு சுயமரியாதை பெற்றுவிட்டார்கள்; ஜெமீன்தாரவர்களும் அவர்தம் நிர்வாக நிலையங்களும் அடிமுதல்நுனி வரையும் பாழும் பார்ப்பனசாத்தான்களாலேயே முற்றுகையிடப்பட்டிருப்பதால் அச்சாத்தான்கள் தம் சாதியினராகிய சங்கராச்சாரியைப்பற்றி ஒன்றை பத்தாக்கியும் ஈரைப் பேனாக்கியும் பேனைப் பெருமாளாக்கியும் வானமளாவ பிதற்றியிருக்கின்றமையால் நம்மரச பரம்பரை இச்சுயமரியாதை இழப்புக்கிலக்கானார்" என இயம்பினர்- இப்பரிதாபத்தால் பிரலாபிப்புக்களாகி அழுகண்ணும் சிந்திய மூக்குமாய் இன்னும் நடப்பதென்னவெனக் கவனிக்கையில் பின்னும்நடந்தமட்டிலா அட்டூழியங்களை நினைக்கையில் நெஞ்சுகுமுறுகிறது, நாகு வறுகின்றது எதெழுதித்தொலைப்பதென என் பேனா மேற்சென்றபாடில்லை- அந்தோ பரிதாபம் பரிதாபம்!

இப்பக்கம் எத்திசையிலும் இவ்வாண்டு பருவகாலமழை துளியேனுந்தூராது, விளைந்து நலந்தரும் நஞ்சை புஞ்சைகள் எல்லாம் சூரியனால்காய்ந்து கால்நடைகளுக்கு ஒரு பிடி பசும்புல்லேனும் அகப்படாது காய்ந்து தீய்ந்து கருகி பாலைவனம்போன்று பாழாய்கிடப்பதோடு பஞ்சப்பிணிக்கிலக்காகி நடைப்பிணம் போன்று அலையும் மக்களிடம் கிஸ்திபோன்ற வரிகளை தம் பார்ப்பனக்கர்ணங்களாலும் கடுகத்தனை கருணையின்றி வசூலித்த பணங்களில் பல நூறை நம் பார்ப்பனரல்லாதாரின் மூடவழக்கபழக்கத்திற் கோரில்லமாயுள்ள சங்கராச்சாரிக்கு பாதகாணிக்கை என்னும் பழங்கால பாழும்வழக்கத்தின் பேரால் அள்ளிக்கொடுத்ததும்போதாதென நவராத்திரி உத்சவத்திற்கு தினம் 500 ரூ வீதம் 9-நாளைக்கு 4500 ரூபாயும் சங்கராச்சாரிகூட வந்த ஜனங்களுக்கு 500 ரூ இனமும் ஆக 5000 ரூ கொடுப்பதாக ஒப்புக்கொண்டாராம். அம்மயநாயக்கனூரிலும் பக்கத்திலுமுள்ள உத்திபோகப் பார்ப்பனன் முதல் துறையப் பார்ப்பனன் எச்சில் கிண்ணம் கழுவும் பார்ப்பனன் ஈறாகவுள்ள பார்ப்பனர்களுக்குமட்டும் அனேகநூறு ரூபாய் செலவில் அறுசுவையுடன் அன்னம்படைத்து பண்டி கொழுக்க உண்ணச்செய்த நம் ஜெமீன்தாரவர்களின் கொடுஞ்செயலைக்காணும் [illegible] போதும் கொதித்தெழுந்த [illegible] எம் போன்றூர் நிலையை இயம்புதலும் வேண்டுமா! இவ்வளவும் அள்ளிக்கொடுத்தது போதாதென்று "அம்மைய நாயக்கனூரில் இடிந்து பாழாய்க்கிடக்கும் ஒரு பெருமாள் கோவிலை பழுதுபார்த்து வைக்கிறேன்; தாங்கள் திரும்பவும் இவ்வூருற்று கும்பாபிஷேகத்தை நடத்திக்கொடுத்தல்வேண்டும்; பாதகாணிக்கை 2500 தருகிறேன்" என வாக்குறுதி கொடுத்திருப்பதாயும் சங்கராச்சாரியும்வருவதாய் ஒப்புக்கொண்டிருப்பதாயும் அந்நகரெங்கும் பேச்சாய் இருக்கிறது. சங்கராச்சாரியும் இவ்வூரில் தங்கிய 12-மணி நேரத்தில் ரூபாய் பல ஆயிரங்கள்வரையும் ஓர் பழங்கால ஜமீன்தாரவர்களின் ஏமாறும் தன்மையால் கொள்ளைகொண்டுவிட்டு பிறகு நிலக்கோட்டை, வத்தலகுண்டு, பெரியகுளம், போடிநாய்க்கனூர், சின்னமனூர் போன்ற இடங்களுக்கு பயணப்படப்போகிறாராம்-

மற்றும் இதைப்பற்றி நான் அம்மயநாய்க்கனூரில் கண்டதும் கேட்டதுமான சங்கதி அவ்வளவையும் விரிக்கில் சங்கராச்சாரியின் பகல் கொள்ளை பெயரேடாய் விரியுமென அஞ்சியும் 'குடி அரசும்' கோபிக்கும் எனக்கொண்டும் சுருக்கிக்கொள்வதோடு எம் சுயமரியாதை வீரர்களுக்குமட்டும் அடியில்வரும் இரண்டொன்றை குறிப்பிட்டுவிட்டு யான்கோரிவந்த காரியத்திற்கு பயணப்பட்டுக் கொள்கின்றேன்.

சுயமரியாதை வீரர்களே! நம் பார்ப்பனரல்லா மக்களில் பெரும்பாலோர் இவ்வருடத்திய மழையின்பிழையால் பஞ்சநோய் வாய்ப்பட்டு உண்ண உணவின்றி உடுக்கஉடையின்றிபடுக்கப் பாயின்றி ஒட்டிய வயிறும் குழிந்த கண்களும் கூனிய முதுகும் நரம்புந்தோலுமாய் நடை தடுமாறி நடைப்பிணமொப்ப வதியும் இச்சமயத்து,வேதம் புராணம்என்ற செல்லாத்தம்பிடியேனும் பெறு செல்லரித்த ஏட்டின் ஏமாற்றுக்கொள்கையை மக்களின் மூடபழக்க வழக்கத்தின் ஆக்கத்தால் வளர்த்து அளவிடற்கியலா பொருட்களை கொள்ளையிலும் கொள்ளையாய் பகற்கொள்ளையடிக்கும் சங்கராச்சாரிஎனும்பார்ப்பனருக்குஉறு துணைபோன அம்மயநாயக்கனூர் ஜெமீன்தாரவர்களைப்பின் பற்றிவிடாது அச்சங்கராச்சாரி வந்திறங்கும் ஒவ்வொரு ஊரிலும் அப்பெரியாரடிக்கும் பகற்கொள்ளையை மக்களறியச்செய்து கொள்ளைக்கூட்டத்தை சுயமரியாதையெனும் விலங்கால் பிணித்து உழைப்பெனும் சிறையிலடைக்கச்செய்து மக்களின் ஏமாறுதல்எனும் தீயம்பொறுப்பிணியை நந்தமிழ் நாட்டைவிட்டோட்டுந்தொண்டே தலைசிறந்ததென்பதை எச்சரிக்கின்றேன் சுமமரியாதைவாழ்க- திருமலாபுரம் மூ- க- பெருமாள்,

---

ஈரோடு, டி. மு. கோர்ட்டு.

S C No 669 of 1927
E. P. R. No 1162 of 1928

மாராயி அம்மாள்—மனுதாரி
கொளந்தாக்கவுண்டன்—வாதி
இராமணகவுண்டன்—பிரதிவாதி

ஷை பிரதிவாதிக்கு மனுதாரி வக்கீல் தெரிவிப்பது.

ஷை நெம்பரில் பிரதிவாதியின் சொத்துக்களை ஏலத்திற்கு கொண்டுவரவேணுமாய் மனுதாரி மனுதாக்கல்செய்து இஸ்தியாரில் கண்ட ஷரத்துக்களை நிர்ணயிப்பதற்காக 25-10-28 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில் நீர் வந்து ஆஜராகாவிடில் ஒருதக்ஷியாய் தீர்மானிக்கப்படும் என்பதை தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஈ. வி. நஞ்சப்பசெட்டியார்
மனுதாரி வக்கீல் 19-10-28.

திரு. சத்தியமூர்த்தியும் சீர்திருத்தமும்.

ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்தி ஐயர் இந்தியா சட்டசபையின் ஆலோசனையில் இருந்துவரும் சாரதாவின் பால்ய விவாகத்தடுப்பு மசோதாவைப்பற்றி எழுதுவதாவது :—

ஹிந்து சமூகம் சீர்திருத்தம் பெறவேண்டியது அவசியம்தான். ஆனால் ஹிந்துமதத்தைப் பரிசுத்தமாக்கக்கூடிய விதத்தில் அதைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமேயொழிய பேருக்கு மேனாட்டு நாகரீக முறையை அநுசரித்துச் சீர்திருத்தம் செய்வது கூடாது. ஹிந்து மதத்தினர் பரஸ்பர சகிப்புத் தன்மையையும் கொண்டிருக்கவேண்டும். பால்ய விவாக விஷயத்தில் சரியான சட்டமில்லாமலிருந்தால் ஹிந்து மதத்தின் அஸ்திவாரத்துக்கே பங்கம் நேரலாம். பால்ய விதவைகளின் கொடுமையையும் சிறு வயதில் பெண்களை குழந்தைக்குத் தாயாக்கிவிடுவதால் நேரிடும் கஷ்டங்களையும் நானறிவேன். தென்னிந்தியாவைப் பொறுத்தமட்டில் பிராமணர்களும் மற்றுஞ் சிலரும்தான் ருதுவாகுமுன் பெண்களுக்குக் கலியாணம் செய்யவேண்டுமென்ற நியதிகொண்டிருக்கின்றனர். ஆனால் இக்காலத்தில் 10 வயதுக்குமுன் கலியாணம் செய்வதே நின்றுபோய்விட்டது. அநேகமாக 13, 14 வயதில் தான் கலியாணம் செய்யப்படுகிறது. ஆகவே இப்போது அனுஷ்டிக்கப்படும் முறை சீர்திருத்தக்காரர்களுக்குச் சாதகமாகவேயிருக்கின்றது. ஆகவே இப்போது சட்டம் செய்யவேண்டியது அவசியமேயில்லை. ருதுவானபிறகு விவாகம் செய்தால் அதைப்பற்றி பிறர் அவதூறு பேசினால் அதற்கு தண்டனை விதிக்கச் சட்டத்தைத் திருத்தினால் அது ஒரு விதத்தில் ஒப்புக்கொள்ளக்கூடியதாகும். சமூகத்தார் இவ்விதம் செய்தால் பாவமென நினைக்கும் ஒரு காரியத்தை அவ்விதம் செய்து தானாகவேண்டுமென சட்டப்படி வற்புறுத்தினால் நாட்டினர் பலருக்கும் வருத்தமுண்டாகலாம். அதோடு அதற்குக்கட்டுப்பட்ட பொது ஜனங்கள் மறுத்து அச்சட்டத்தை சட்ட புத்தகத்திலிருந்து எடுத்துவிட கிளர்ச்சி செய்வார்கள்.

பராசர் ஸ்மிருதியில் 12 வயதில் பெண்ணுக்குக் கலியாணம் செய்யாவிட்டால் பெரும் பாவஞ் செய்ததாகும் எனச் சொல்லப்படுகிறது. ஆகவே இவ்விதம் நடப்பதென்றால் இந்த சட்டப்படி ஜெயிலுக்குப் போகவேண்டும். ஜெயிலுக்குப் போவதா? அல்லது பாவத்தைதேடிக் கோள்வதா? இது ஒரு பெரும் சிக்கலான விஷயம். மத சம்மந்தமான காரியங்களைச் செய்யக்கூடாதென்றும் செய்தால் ஜெயிலுக்குப் போகவேண்டுமென்றும் சட்டமூலம் வற்புறுத்துவது தகுதியா? அப்படி இளவயதிலேயே பெண்கள் தாய்மார் நிலைமையடைந்து கஷ்டப்படுவதை தடுக்கவேண்டுமானால் சம்மத வயதை 14 ஆக உயர்த்திக்கொள்ளலாம். 14 வயதாகாத பெண்ணோடு புருஷன் ஸம்ஸர்க்கம் வைத்துக்கொள்ளக் கூடாதென தடுத்துவிடலாம். இதனால் மதக்கோட்பாடுகளுக்கு மாறுதல் ஒன்றும் ஏற்படாது. அறிவாளிகளான சீர்திருத்தக்காரர்கள் இவ்வழியிலேயே முயற்சி செய்யவேண்டும். 11 வயதுக்குமுன் பெண்களுக்கே கலியாணம் செய்யாமல் தடுப்பதை நான் ஆதரிக்கிறேனானாலும் அவ்வயதுக்குமுன் கலியாணம் செய்விப்பவர்களுக்குக் காவல் தண்டனை விதிக்கச் சட்ட மியற்றுவதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. அப்படி சட்டம் செய்தால் சிறைச்சாலைகளில் வைதீகர்களை நிரப்பத்தான் வேண்டிவரும்-இவ்விஷயத்தில் உணர்ச்சி அதிகமாகயிருப்பதை மதித்து ஸ்ரீமான் எஸ். சீனிவாச ஐயங்கார் தமது அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். "சுவாமி"

சுயமரியாதைப் பிரசாரம்.

கரூர்

13-10-28 சனிக்கிழமையன்று சுயமரியாதைப் பிரசாரத்தின் பொருட்டுக் கரூரில் ஒரு கூட்டம் கூட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று மாலை 2 மணி வண்டியில் ஈரோட்டிலிருந்து திருவாளர்களான ஈ. வெ. ராமசாமி நாயக்கர், எஸ், ராமநாதன், M.A. B.L., எ. ஈஸ்வரன், சிதம்பரனார், வெங்கடாசல பண்டிதர், எம். வீராசாமி, எம். ஆர். செலமேலு, என். ராமசாமி, எம். அமீர் சாயபு, பாட்சா சாயபு, சுபான் சாயபு, ராமசாமி நாயக்கர், இ. ஒ. லி. முத்துசாமி கவுண்டர் முதலியவர்கள் வந்தார்கள். கரூரிலுள்ளார் பலர் ஸ்டேஷனுக்கு வந்து தலைவருக்கு மாலையிட்டு மேள தாளங்களுடன் ஊர்வலமாக ஜாகைக்கு அழைத்துச்சென்று அங்கு சிற்றுண்டி வழங்கியபின் மறுபடியும் ஊர்வலமாக அமராவதி நதிக்கரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மீட்டிங்கு இடத்திற்கு அழைத்து சென்றார்கள். மழைபிட்டிக் கொண்டிருந்தும் சுமார் ஆயிரம்பேர்களுக்கு மேலாகவே கூடிவிட்டார்கள்.

கவுன்சிலர்கள் திருவாளர்கள் தாண்டவம் செட்டியார், கிருஷ்ணசாமி கவுண்டர் முதலியவர்களும், பல வியாபாரிகளும், மிராசுதாரர்களும் மற்றும் அநேக முக்கியஸ்தர்களும் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

திரு. கந்தசாமி செட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மகாநாடு 6 மணிக்கு ஆரம்பமானதும் முதலில் திருவாளர் சாமி சிதம்பரனார் புராணங்களால் நமக்கு ஏற்பட்ட கெடுதிகளைப் பற்றியும், திருவாளர் எஸ். ராமநாதன் கதரைப்பற்றியும், சிலகட்டுப்பாடுகளால் ஏற்படும் அடிமைத்தனத்தைப் பற்றியும் பேசினார்கள். திருவாளர் ராமசாமி நாயக்கர் சுயமரியாதை இயக்கத்தின் தத்துவத்தைப் பற்றியும், கதர், தீண்டாமை, மூடப்பழக்கவழக்கம், மதப்புரட்டு, அரசியல் புரட்டு ஆகியவைகளைப்பற்றியும் பேசினார். அக்கிராசனர் உபன்யாசகர்களைத் தழுவியும் சிலாகித்தும் பேசி எல்லோருக்கும் மாலையிட்டு வந்தனோபசாரம் சொல்லி கூட்டம் 8-30 மணிக்கு மழையுடன் முடிவுற்றது.

சோழவந்தான்

பிறகு மறுநாள் காலையில் கரூரிலிருந்து திருவாளர்கள் எஸ். ராமநாதனும் நாயக்கரும் புறப்பட்டு நேரே மெயில் வழியாய் சோழவந்தானுக்கு தேசியபள்ளிக்கூட ஆண்டுவிழாவுக்கு போய்சேர்ந்தார்கள் அங்கிருந்து அக்கிராசனர் திரு ராமநாதன் அவர்கள் மோட்டாரில் ஊர்வலமாக தேசியப்பள்ளிக் கூடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு ஏராளமானகூட்டம் கூடியிருந்தது. மதுரையில் இருந்து திருவாளர்கள் எம். டி. சோமசுந்தரமுதலியார், அய்யாதுரைமுதலியார், ஷண்முகவேல்கவுன்சிலர் முத்துகாமாக்ஷி முதலியார் கவுன்சிலர், கூடலிங்கம்பிள்ளை கவுன்சிலர், சோலைமுதலியார், கொண்டய்யநாயுடுமுதலியபலர் வந்திருந்தனர். உயர் திருவாளர்கள் மு. பட்டாபிராமய்யர் அவர்கள் திரு ராமசாமி அவர்களைப் புகழ்ந்து பேசி அக்கிராசனராக பிரேரேபித்தார். திரு நித்தியானந்தம் அவர்கள் ஆமோதிக்க திரு கண்ணாயிரம் முதலியார் அவர்கள் ஆதரிக்க திரு ராமநாதன் அவர்கள் அக்கிராசனத்திலமர்ந்து முன்னுரையாக தேசியப்பள்ளிக்கூடத்தைப்பற்றி சிலவார்த்தைகள் சொல்லி பிள்ளைகளுக்கு பரிசளித்தவுடன் திரு நாயக்கரை பேசும்படி கேட்டுக்கொண்டார். திரு நாயக்கர் 2 மணிநேரம் உண்மை தேசியத்தைப்பற்றியும் அதற்கு விரோதமாயிருக்கும் மதப்புரட்டர்களின் உபத்திரவத்தைப்பற்றியும் சங்கராச்சாரி முதலியமடாதிபதிகளின் நடவடிக்கைகளைப்பற்றியும் கதரைப் பற்றியும் பேசினார். பிறகு குழந்தைகளால் பிருதிவிராஜ் என்கின்ற நாடகம் நடத்தி காண்பிக்கப்பட்டது. பிறகு அக்கிராசனர் முடிவுரைகூற திரு நித்தியானந்தம் வந்தனோபசாரம் சொல்ல கூட்டம் முடிவுபெற்றது. இரவு திரு மு சுப்பரமணிய முதலியார் வீட்டில் விருந்து நடந்த பிறகு அன்றிரவே திரு நாயக்கர் ராமநாதன் முதலியவர்கள் மதுரைக்கு சென்றுவிட்டார்கள்.

மதுரை.

மாலை 6-மணிக்கு மதுரை கோரிபாளையத்தில் திரு கருப்பிட்டிநாய்க்கர் மண்டபத்தில் தென் இந்திய நலஉரிமைச்சங்கத்தின் சார்பாக ஒருபொதுக்கூட்டம் நடைபெற்றது.

அது சமயம் அடியில் கண்டவர்கள் விஜயம்செய்திருந்தார்கள் திருவாளர்கள். எம். டி. சோமசுந்தரம் முதலியார், கா. ம. அலாவுதீன் இராவுத்தர், ஆர். எஸ். நாயுடு, எஸ். கூடலிங்கம்பிள்ளை முனிசிபல் கௌன்சிலர், வி. சி. வெங்கிடசாமி நாயுடு, முத்துக்காமாக்ஷி முதலியார், எம். துரைசாமிபிள்ளை வக்கீல், டி. நாராயணபிள்ளைவக்கீல், டி. கொண்டய்ய நாயுடு, எஸ். சோலை முதலியார், ஷண்முகவேலு, அய்யாத்துரை முதலியவர்களும் இன்னும் பலரும் காணப்பட்டார்கள். இக்கூட்டத்திற்கு திரு. எம். டி. சோமசுந்தர முதலியார் தலைமை வகிக்கவேணுமாய் திரு. டி. நாராயணபிள்ளை வக்கீல் பிரேரேபித்தார். அதை திரு. எஸ். கூடலிங்கம் பிள்ளை முனிசிபல் கவுன்சிலர் ஆதரித்தார்.

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுந்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-௵ ஐப்பசி-௴ 5-௨

சீர்திருத்தமும் இந்துமத ஸ்மிருதியும்.

திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரி அவர்கள், தற்காலம் ஆலோசனையிலும் கமிட்டி விசாரணையிலும் இருந்துவரும் குழந்தை விவாகத் தடை மசோதாவைக் கண்டித்து ஒரு "ஸ்ரீமுகம்" வெளியிட்டிருக்கின்றார். அதை "சுதேசமித்திரன்" பிரசுரித்துள்ளபடி மற்றொரு பக்கத்தில் எடுத்துப் போட்டிருக்கின்றோம். அதன் காரண காரியங்களைப்பற்றி ஆராயுமுன் திரு. சத்தியமூர்த்தி யார் என்பதையும், அவர் எந்த முறையில் வெளிப்படுத்தி இருக்கின்றார் என்பதையும் முதலில் கவனிப்போம்.

திரு. சத்தியமூர்த்தியை அவருடைய தனித்த ஹோதாவில் ஒரு சாதாரண மனிதர் என்பதாகச் சொல்லிவிடலாமானாலும் அவருக்கு இம்மாதிரியான ஸ்ரீமுகங்கள் வெளியிட சந்தர்ப்பங்கள் அளித்ததும் அந்த ஸ்ரீமுகங்களை மக்கள் கவனிக்க நேர்ந்ததும், சில விஷயங்களிலாவது அவர் இந்திய மக்கள் பிரதிநிதி என்கின்ற தன்மை அடைந்திருக்கிறார் என்பதே. அதாவது "தேசிய அரசியல்" இயக்கம் என்று சொல்லப்படுவதில் ஒரு குறிப்பிட்ட மனிதராகவும், சென்னை சட்டசபை என்பதில் ஒரு ஜனப் பிரதிநிதி அங்கத்தினராகவும், அதிலும் படித்த மக்களின் பிரதிநிதியாகவும், அதாவது யூனிவர்சிட்டி பிரதிநிதியாகவும், சென்னை முனிசிபாலிட்டியில் ஒரு அங்கத்தினராகவும், மற்றும் பொதுஜன சேவை செய்கின்றவர் என்று சொல்லிக் கொள்ளும் கூட்டத்தில் சேர்ந்தவராகவும் இருக்கின்றார் என்பதே. அன்றியும், தன்னை ஒரு சீர்திருத்தக்காரர் என்றும், மதம், சமூகம் முதலியவைகளில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியம்தான் என்றும் சொல்லிக் கொள்பவர்.

எனவே, இப்படிப்பட்ட ஒருவர், குழந்தைகள் புருஷன் பெண்ஜாதியான வாழ்வு நடத்தாதிருப்பதற்கும், குழந்தைகள் தங்கள் குழந்தைப் பருவம் மாறுவதற்கு முன்பே பிள்ளை பெறும்படியான நிலைமையை உண்டாக்காமல் இருப்பதற்கும், மற்றும் மனித சமூகத்தின் அறிவு, சரீர வளர்ச்சி, பலம் முதலியவைகள் விர்த்தி அடைவதற்கும் அவசியமானதான மேல்கண்ட குழந்தை விவாகத் தடுப்பு மசோதா என்பதை எதிர்த்து போராட முன்வந்து, அதற்கு ஆதாரமாக பெரிதும் மதசம்பந்தமான ஆக்ஷேபனைகளையே எடுத்துக்காட்டி இருக்கிறார்.

இது மாத்திரமல்லாமல், மற்றும் இதுபோன்ற பல சீர்திருத்தங்களையும் மதத்தை சாக்காகக் கொண்டே ஆக்ஷேபித்து வந்திருக்கின்றார். இதற்கு உதாரணமாக இரண்டொன்றைக் குறிப்பிடுகின்றோம்.

அதாவது கொஞ்ச நாளைக்கு முன் சென்னை சட்டசபையில் திரு. முத்துலக்ஷ்மி அம்மாளால் கொண்டுவரப்பட்ட சாமி பேரால் விபசாரத்திற்கு பொட்டுக்கட்டும்வழக்கத்தடுப்பு மசோதாவையும் மதத்தை சாக்காகக் கொண்டே தடுத்து நின்றதும் யாவருக்கும் தெரிந்ததாகும். அந்தசமயத்தில்திரு. சத்யமூர்த்தி அய்யர் சொன்ன ஆக்ஷேபனை என்னவென்றால், பொட்டுகட்டுகின்ற வழக்கம் கேட்டைத் தாத்தகத்தானும் அதை நிறுத்த சம்மதிப்பது மதத்தில் பிரவேசிப்பதாகும் என்றும், இன்று பொட்டுக் கட்டுவதை நிறுத்த ஒப்புக்கொண்டால் நாளை மற்றொரு சீர்திருத்தம் வரும் என்றும், ஆதலால் அதற்கு சம்மதிக்க முடியாதென்றும்சொல்லி விட்டார்.

பிறகு சென்ற வாரத்தில், சென்னையில் நடைபெற்றுவரும் விபசாரங்களை தடுக்க ஒரு மசோதா கொண்டுவர முயற்சித்த போதும் இதுபோலவே தடைகல்லாய் நின்றதுடன் அவர்சொன்ன சமாதானம் என்னவென்றால் "விபசாரிகள் எவ்வளவுதான் ஒழுக்க ஈனமாக நடந்துகொண்டாலும் அவர்களும் நமது சமூகத்தார் அல்லவா? அப்படியிருக்க அவர்களின் விபசாரத் தொழிலை நிறுத்திவிட்டால்பிறகு அவர்கள் ஜீவனத்திற்கு என்னசெய்வார்கள்" என்று சொல்லி ஆக்ஷேபித்தாராம்.

இம்மாதிரியாகவே நவ்விதமான சீர்திருத்தங்கள் வந்தபோதிலும் மதத்தின்பேராலும் சமூகத்தின்பேராலும் ஆக்ஷேபித்து அவைகள் நிறைவேற்றப்படாமல் போவதாயிருந்தால் பிறகு, எந்த விதத்தில் தான் நமக்கு கதிமோட்சம் ஏற்படக்கூடும்? அன்றியும் பாராசர்ஸ்மிருதியும் மனுஸ்மிருதியும் நமது வாழ்க்கைக்கும் மதத்திற்கும் ஆதாரமென்பதை நாம் சகித்துக் கொண்டு அதைப்பின்பற்றுவதென்றால் அதை விட ஈனவாழ்க்கை வேறு எங்காவது ஏதாவது உண்டா என்று கேட்கின்றோம். இப்பேர்ப்பட்ட இந்து மதம் என்பதும் அதனுட் பிரிவுகள் என்பதான சைவ வைணவ முதலிய சமயங்கள் என்பதும் அதன் ஆதாரங்களான வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, ஆகமங்கள் என்பனவகளும் நமது மோக்ஷசாதனத்திற்கு ஏற்பட்டவை என்றும் உலகத்திலுள்ள மற்ற மதங்களுக்கெல்லாம் சிறந்தது என்றும் சொல்லிக்கொண்டு அச்சமயங்களைக் காப்பாற்ற வெளிவந்திருக்கும் வீரர்கள் "சுயமரியாதை இயக்கம் இந்து மதத்தைக் கெடுக்கின்றது, வைணவ மதத்தை வைகின்றது, சைவசமயத்தை ஒழிக்கின்றது" என்று ஊளையிட்டுக் கொண்டிருக்கிறார்களேயொழிய இம்மாதிரிசீர்திருத்தத்தைப் பற்றியாவது இதை எதிர்க்கும் ஆதாரங்களைப்பற்றியாவது கடுகளவுகவலையாவது கொள்ளுகின்றார்களா என்பதை பொது ஜனங்களை யோசித்துக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

அன்றியும் மத சமயக்காரர்கள் என்பவர்கள் "சம்மந்தன் சமணர்களைக் கழுவேற்றினது பொய்யாமெய்யா" "முதலையுண்ட பாலனை 14 வருஷம் வளர வயிற்றில்வளர்த்து வெளியில் கக்கினதை ஒப்புக்கொள்ளுவாயா மாட்டாயா?" "ராமன் கடவுளா மனிதனா?" "ராவணன் யோக்கியனா ராமன் யோக்கியனா" "சிவன் பெரியவனா விஷ்ணு பெரியவனா?" "விஷ்ணுவுக்கு வடகலை நாமமா தென்கலை நாமமா?" "சூரியனுடைய ரதத்திற்கு கட்டுகுதிரையா பதினாறு குதிரையா?" "விதி பெரியதா மதி பெரியதா?" இது போன்ற விஷயங்களில் "மத பக்தி"யையும் அறிவு சக்தியையும் காண்பித்துக் கொண்டு "சமயத்தொண்டையும் தெய்வத் தொண்டையும்" செய்து கொண்டும், இம்மாதிரியான விஷயங்களிலெல்லாம் பார்ப்பனர்கள் சொன்னதே "தெய்வ வாக்கு" என்பதாகவும், அதை மறுத்தால் தங்களுக்கு எந்த விதயோக்கியதையும் இல்லாமல் போய்விடும் என்று பயந்துகொண்டும் பாமர மக்களை மிருகங்களாக்கி விடுகின்றார்கள். ஆதலால் இம்மாதிரி மதமும் சமயமும் நமக்கு எதற்காக வேண்டும்? இவை மக்களுக்கு நன்மை அளிக்கும் சமயமாகுமா? என்பதாக கேட்க ஆரம்பித்தால் அதை நாஸ்திகம் என்று சொல்லி விரட்டி அடிக்கப் பார்க்கின்றார்களேயொழிய மனிதத்தன்மை அறிவுத்தன்மை என்பதை ஒரு சிறிதும் காட்டுவதே கிடையாது.

தவிர, திரு சத்திய மூர்த்தி "பால்ய விதவைகளின் கொடுமையையும் சிறு குழந்தைகள் பிள்ளை பெற்று தாயாகி விடுவதால் நேரிடும் கொடுமையையும் நான் அறிவேன்" என்று கொடுமைகளையும் கஷ்டங்களையும் ஒப்புக் கொள்ளுகின்றார்.

ஆனால் கூடவே அதன் கீழ் "12 வயதுக்குள் பெண்களுக்கு கல்யாணம்செய்யாவிட்டால் பாபம் வரும் என்று பாராசர்ஸ்மிருதியில் சொல்லி இருக்கின்றது" என்கின்றார். கொடுமையையும் கெடுதியையும் நீக்குவது பாபமாகுமானால் அந்தப் பாபத்திற்கு பயப்படவேண்டுமா? என்றுதான் கேட்கின்றோம்.

அன்றியும் திரு. சத்தியமூர்த்தி ஆதாரம் காட்டும் பாராசர் ஸ்மிருதியின் விவாகப் பிரகரணத்தில் "8-வயதுப்பெண்ணை விவாகம்செய்துகொடுத்தவன் சுவர்க்கலோகத்தையும், 9-வயதுப்பெண்ணை விவாகம் செய்துகொடுத்தவன் வைகுண்டத்தையும், 10-வயதுப் பெண்ணை விவாகம் செய்துகொடுத்தவன் பிரம்மலோகத்தையும் அடைகிறான்; அதற்கு மேற்பட்டு பெண்ணை விவாகம் செய்துகொடுப்பவன் ரௌரவாதி நரகத்தை அடைகின்றான்" என்று எழுதியிருக்கின்றது

ஆனால் திரு. சத்தியமூர்த்தி "10-வயதுக்குமுன் கல்யாணம் செய்யும் வழக்கம் இப்போது நின்றுபோய்விட்டது" என்று சொல்லுகின்றார். இந்தப்படி பார்த்தால் இப்போது பெண் பெற்றவர்கள் எல்லோரும் ரௌரவாதி நரகத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்றுதானே சொல்லவேண்டும். எனவே, இனி 16-வயதில் கலியாணம் செய்பவர்களுக்கு புதிதாக பாவம் வது என்று கேட்கின்றோம்.

தவிர திரு. சத்தியமூர்த்தி புயப்பறிவதாக வேஷம்போடும் பாராசர் ஸ்மிருதியின் யோக்கியதையை கவனிப்போம்.

"10-வயதுக்கு மேல்பட்ட பெண்ணுக்கு கலியாணம் செய்யாவிட்டால் ரௌரவாதி நரகத்தை அடையவேண்டும்" என்று சொல்லும் அதே ஸ்மிருதியானது அதே ஸ்திரீகள் விஷயத்தில் சொல்லுவதென்னவென்றால் "ஸ்திரீகள் பூமிக்கு சமானமானவர்கள், அவர்கள் குற்றம் செய்தால் தூஷிக்கக்கூடாது. அவர்கள் என்ன தவறுதல் செய்தாலும் அவர்களை விலக்கிவிடக்கூடாது. சண்டாளன் வசித்த பூமியை எப்படி சில சுத்திகள் செய்து அதில் நாம் வசிக்கின்றோமோ அதுபோல் ஸ்திரீகள் சண்டாள சம்பந்தம் வைத்துக் கொண்டாலும் அவர்களை சுத்தி பிராயச்சித்தம் செய்து ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று சொல்லியிருக்கின்றது. அந்த பிராயச்சித்தம் என்னவென்று பார்ப்போமானால் அதாவது "ஒரு பிராமணஸ்திரீ தன் மனதறிந்து ஒரு "சண்டாளனுடன்" சம்பந்தம் வைத்துக்கொண்டால் சாந்திராயண கிருச்சிரம் செய்துவிட்டால் சுத்தியாகிறாள்" என்று சொல்லியிருக்கின்றது. இது பாராசர் ஸ்மிருதி பிராயச்சித்த காண்டம் 7-வது அத்தியாயம் 23-வது சுலோகம்.

சாந்திராயண கிருச்சிரம் என்பது "கிருஷ்ணபக்ஷம் முதல் அமாவாசை வரையில் தினம் ஒரு பிடி சாதமாக குறைத்துக்கொண்டுவந்து ஒரு நாள் பட்டினி விரதமிருந்து மறுபடியும் ஒவ்வொரு பிடி விருத்திசெய்து சாப்பிடவேண்டியது". இது 7-வதுகாண்டம் 2-வது சுலோகம்.

"ஒரு பிராமண ஸ்திரீ பாவசீலர்களான சூத்திரர்களால் அநுபவிக்கப்பட்டால் அவள் பிராஜாபத்திய கிருச்சிரம் செய்வதாலும் ருது ஆவதாலும் சுத்தி அடைகின்றாள்" என்று சொல்லுகின்றது. (இது மேல்படி காண்டம் மேல்படி அத்தியாயம் 24—வது சுலோகம்.)

பிராஜாபத்திய கிருச்சிரம் என்பது 3-நாள் காலையிலும் 3 நாள் மாலையிலும் புசித்து 3நாள் யாசிக்காமல் வந்ததைப் புசித்து 3 நாள் உபவாசமிருத்தல். [இது பாராசர் ஸ்மிருதி 7வது காண்டத்தில் 9வது அத்தியாயத்தில் சொல்லப்படுகிறது.)

இதுவும் செய்வதற்கு கஷ்டமாயிருக்குமானால் 12 பிராமணர்களுக்கு சாப்பாடு போட்டால் போதும். (இதுவும் மேற்படி அத்தியாயம்.)

இன்னும் இதுபோலவே மகா பாதகம் என்று சொல்லும்படியான "குரு பத்தினியைப் புணர்ந்தவன் ஒரு பசுவையும் எருதையும் பிராமணனுக்குக் கொடுத்தால் சுத்தனாகிறான்" (ஷை காண்டம் ஷை அ. சு. 13)

இன்னும் இதைவிட மகாபாதகமான அனேக காரியங்களுக்கும் ஒரு வேளை இரண்டு வேளை பட்டினி கிடப்பதும் பிராமணனுக்குக் கொடுப்பதுமே பிராயச்சித்தமாய் சொல்லப்படுகிறது. அதில் ஒரு பிராமணனை சூத்திரன் என்பதாகப் பிரித்து அதற்குத் தகுந்தபடி பிராயச்சித்தம் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது "ஒரு வேதம் ஓதின ஒரு பிராமணன் ஒரு பசுவைப் புணர்ந்தால் ஒரு எருதை பிராமணனுக்குக் கொடுத்தால் சுத்தனாகிறான். இதே காரியத்தை ஒரு சூத்திரன் செய்தால் 4 பசுவையும் 4 எருதையும் பிராமணனுக்குக் கொடுத்தால சுத்தனாகிறான்" என்று சொல்லுகின்றது. (ஷை அத்தியாயம் 14வது சுலோகம்.)

எனவே இப்போப்பட்ட காரியங்களுக்கெல்லாம் இவ்வளவு சுலபமாக பிராயச்சித்தம் சொல்லி இருக்கும்போது ஒரு பெண்ணை 12வயது ஆனபிறகு கலியாணம்செய்வதால் ஏற்படுகிற பாபத்திற்கு மிகவும் சுலபமான பிராயச்சித்தம் தானே இருக்கக்கூடும். ஆதலால் பாராசர் ஸ்மிருதியை 'கடவுள் வாக்கு' என்றே நம்புகின்றவர்களுக்குக் கூட குழந்தை விவாகத்தடுப்பு மசோதாவில் பிரமாதமான கெடுதி ஒன்றும் வந்துவிடாது என்றே சொல்லுவோம். அதிகமான தண்டனை விதித்திருந்தாலும் அது 'பாலும் பழமும் மாத்திரம் சாப்பிட்டுக் கொண்டு ஒருவேளை பட்டினி இருக்கவேண்டும்' என்றுதான் இருக்கக்கூடும். ஆதலால் உண்மையானதும் அவசியமானதுமான சீர்திருத்தங்களை விரும்புகிறவர்கள் மதம், சமயம், சாஸ்திரம், சாமி என்கின்ற பூச்சாண்டிகளுக்குஒரு சிறிதும் பயப்படக்கூடாது என்பதற்காகவே இதை எழுதுகிறோம்.

அந்தோ!

பரஞ்சோதி சுவாமிகள் பிரிந்தார்

சிதம்பரம் பொன்னம்பல மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ பரஞ்ஜோதிசுவாமிகள் சிலநாள் உடல் நலங்குன்றியிருந்து நிகழும் அக்டோபர் மாதம் 10 ம் நாள் புதன்கிழமையன்று, அந்தோ! இம்மண்ணுலகைவிட்டுப் பிரிந்தார்- சுவாமிகள் தென்மொழியிலும் வடமொழியிலும் நல்லதேர்ச்சி பெற்றவர். தாம் மடாதிபதியானதும் காலநிலைமைக்குத் தக்கபடி மடத்துவேலைகளுடன் பொது நலத்திற்கான வேலைகளையும் கவனித்து உழைத்து வந்தார். கதர், மதுவிலக்கு, தீண்டாமைவிலக்கு முதலியவைகளை பல இன்னல்களுக்கு இடையிலும் உபதேசித்து வந்தவர். ஆயிரக்கணக்கான ரூபாய் செலவுசெய்து சிதம்பரம் தச்சன்குளத்தையும் ஞானப்பிரகாசர் குளத்தையும் வெட்டியும் படிகட்டியும் சிதம்பரவாசிகளுக்கு உதவினவர். சிதம்பரம் நகரபரிபாலன சபையில் ஓர் ஆதிதிராவிட சகோதரிக்கு ஸ்தானம் வாங்கிக்கொடுத்ததும் சுவாமிகளே, ஆகலின் இத்தகைய பெரியாரின் பிரிவாற்றாது தவிக்கும் தமிழ்மக்கள் அனைவருக்கும் சிறப்பாக சிதம்பரவாசிகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்-

யாகத்தின் ரகசியம்.

ஓர் சம்பாஷணை

சங்கரன்— ஏது நண்பனே, இன்று அவசரமாய்ச் செல்கின்றாய் வழி மறந்துவிட்டதோ?

கிருஷ்ணன்— அப்படியில்லை, நாளையத்தினம் எங்கள் கிராமத்தில் ஓர் யாகம் நடக்கப் போகிறது, இன்று மாலையிலேயே ஆரம்பம், அதற்காகப் போகிறேன்.

சங்— யாகம் என்றால் எனக்கு புரியவில்லை அதை எப்படிச் செய்வார்கள்?

கிரு— அதை எல்லாம் உனக்குச் சொல்வது கூடாது; அந்தரங்கமானது; அதுபெ கள்பாரம்பரை பரம்பரை வழக்கமாயுள்ளது; யாகம் செய்தால் ஊர் செழிக்கும், பிராமணர்களுக்குச் செல்வம் வளரும்.

சங்— நண்ப, எவ்வளவு அந்தரங்கமானாலும் பலர் சேர்ந்து செய்தால் எப்படியும் வெளிவந்துதானே தீரும். அன்றியும் நீ சொல்வதைப்பார்த்தால் நல்லகாரியமாகத்தானே தெரிகிறது. அதை நான் தெரியும்படி சொல்லவேண்டுகிறேன்.

கிரு— ஏது என்னைச் சீக்கிரம் போகவிடமாட்டாய் போலிருக்கிறது. எனக்கு முக்கிய நண்பனானதால் சுருக்கமாகக் கூறுகிறேன். மற்றவர்களிடம் சொல்லாதே.

சங்— அப்படியே.

கிரு— எங்களூர் சிவன் கோயிலின் வடபாகத்தில் யாக குண்டம் வெட்டிப் பந்தலிட்டு அதற்கு வேண்டிய சமித்துக்கள், நெய், பால், தயிர், தானியம், தேங்காய், பழம் முதலிய சாமான்கள் தருவித்து அயலூர்களிலுள்ள வாத்தியார்கள், கனபாடிகள், சடாவல்லவர்கள், தீக்ஷதர்கள், முதலியோரையெல்லாம் வருவித்து யாகத்தை முடித்துத் தேவர்களுக்கு அவிர்ப்பாகம் கொடுத்து பிராமண போஜனம் செய்து முடிப்பார்கள்.

சங்— நண்ப இவ்வளவு அவசரமாகச் சொல்லிவிட்டால் நான் தெரிந்துகொள்ள வேண்டாமா? உபாத்தியாயர்கள் என்றுபே நம்முடைய பள்ளிக்கூட உபாத்தியாயர்களெல்லாம் வருவார்களா?

கிரு— அட மூடமே, இதுகூடத் தெரியாதா? இந்த உபாத்தியார்களுக்கு அங்கென்னவேலை? வேத அத்யயனஞ்செய்த உபாத்தியாயர்களாகிய வைதீகர்களாகத்தும்.

சங்— அந்த உபாத்தியாயர்களைக்கொண்டு நம் பள்ளிக்கூடத்தில் அவ் வேதத்தைக் கற்றுக்கொடுக்கும்படி செய்தால் இந்த விஷயங்களெல்லாம் எங்களுக்கும் தெரிய வழியிருக்குமே?

கிரு— நீ என்ன பைத்தியகாரனாயிருக்கிறாயே! நீங்களெல்லாம் அவ் வேதத்தைக் காதாலும் கேட்கப்படாதாம். அப்படியானால் பிராமண தர்மம் கெட்டுவிடுமாம்; உதாரணமாகக் கல்லிடைக் குறிச்சி சமஸ்கிருத பாடசாலையைத் தாலுக்கா போர்டார் வகித்து நடத்தும்போது உங்களவர்களைச் சேர்க்கும்படி செய்ய, அவர்களுக்கு எங்கள் உபாத்தியாயர்கள் கற்றுக்கொ[illegible] மறுத்துவிட்டதால் அப்பாடசாலை [illegible]டு நிர்வாகத்

திலிருந்து நீக்கிவிட்டார்கள். இப்போது அது ஆற்றங்கரையில் ஆற்றங்கரைப்பிழைப்பாகவே காலத்தை எதிர்பார்க்கிறது.

சங்— ஐயோ! அப்படிப்பட்ட வேதமொன்றிருக்கிறதா? அதில்அப்படிச் சொல்லியிருக்குமா? அதை யார் செய்தது?

கிரு— அது கடவுள் பிராமணர்களுக்காகச் செய்து கொடுத்தாராம். அவர்களே கற்று அதன்படி காரியங்களை அவர்களே செய்யவேண்டும். மற்றவர்கள் கேட்டாலும் பார்த்தாலும் கற்றாலும் தண்டனையுண்டு.

சங்— படிப்புக்குத் தண்டனையா! வெகு அழகு! உண்மையான கடவுள் இப் பாஷையைச் செய்திருக்கமாட்டார். அப்படிச் செய்திருந்தால் எல்லோருக்கும் பொதுவாகயிருக்கும். உலக பாஷைகள் கற்பவருக்கெல்லாம் பொதுவாகும். இது தன்னலம போற்றும் பிராமணக் கடவுள்தான் செய்திருப்பார். அவருக்குக் கடவுள் பட்டம் தகுதியன்று.

கிரு— உனக்கென்னடா தெரியும், அப்பாஷை தேவ பாஷையாக்கும். சாதாரண மனிதர்கள் அறியப்படாதென்றும் அது அவ்வேதத்திலேயே சொல்லியிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

சங்— தண்டனையுண்டென்றாயே, இதற்கு முன் அப்படி எங்கேயாவது நடந்திருக்கிறதா?

கிரு— இக்காலத்தான் ஆங்கில அரசாட்சியாய்ப் போய்ச்சே! அக்காலத்து ஆரிய அரசர்களாகிய மனு, மந்தாதா, தசரதன், இராமன், தருமர், முதலியவர்கள் ஆட்சியானால் நீ இதைபபற்றி இவ்வளவு பேசினதற்கே நீ படும்பாடு வேறாகும்.

சங்— அம்மம்மா! அவ்வநியாய அரசர்கள் வேண்டாமப்பா! யாகத்தைப்பற்றி இன்னும் கொஞ்சம் விவரிக்கவேண்டும்.

கிரு— சீக்கிரம் போகவேண்டும், கேட்பதை சுருக்கமாகவே கேள்-

சங்— நண்ப இந்த யாகம் எதற்காக யாரை உத்தேசித்தது?

கிரு— உலக க்ஷேமத்துக்கும் பிராம்மண அபிவிருத்திக்கும் இந்திரனை உத்தேசித்து செய்வது.

சங்—இந்திரன் வருவானா? மந்திரம் செய்பவராவது காணுவார்களா?

கிரு— அது முடியாது. அவனுக்குரிய மந்திரததாலழைத்து மந்திர பூர்வமாய் ஆகுதி செய்து அவிர்ப்பாகம் கொடுப்பதை அவன் ஏற்றுத் திருப்தியடைவானென்பது வேதாந்தம்.

சங்— இந்திரனுக்கு எதை எப்படி ஆகுதி செய்து அவிர்ப்பாகம் கொடுப்பது.

கிரு— உன்னிடம் நான் சிக்கிக்கொண்டேன- இதற்குமேல் சொன்னால் என்னை ஏளனம் செய்தாலும் செய்வாய்.

சங்— நண்ப உன் கூட்டத்தார் செய்கைக்கு உன்னை ஏளனஞ் செய்வதுமன்றாயிருக்குமா? விஷயம் தெரிய கேட்கிறேன்.

கிரு— இப்போ சொல்லப் போகிற விஷயத்தில் எனக்கும் ஒருவிதத்தில் அதிருப்திதான்; வைதீகாள்காரியம்- அதை உனக்கும் தெரிவித்துவிடுகிறேன். அதாவது யாககுண்டத்தில் பலவித சமித்துக்களையிட்டு ஆவின் நெய் சொரிந்து எரித்து, தானிய வகைகள், பஞ்ச கவ்வியங்கள், பழந் தேங்காய், பட்டு முதலியவைகளைப் போட்டு கடைசியாய் கொழுத்த ஆட்டை தீட்சதரென்பவர் குரல்வளையை நெருக்கி உயிரைப் போக்கி அதை அறுத்து வவை என்னும் இரத்தாசயத்தை எடுத்து மந்திரஞ் சொல்லி ஓம குண்டத்தில் அவிர்ப்பாகம் கொடுப்பார் இதுதான் யாகம்- இதன்ரகசியம் தெரிந்ததா?

சங்— சிவ சிவா, தெரிந்துகொண்டேன்- ஆட்டின் மாமிசத்தை யென்னசெய்வார்கள்.

கிரு— அதைக் கேளாதே; சொல்லத்தயாரில்லை- நீயேயூகித்துக்கொள்- அதுபலவிதம்.

சங்— நண்ப, இதுவிஷயத்தைப்பலர் பலவிதமாகப் பேசினர். அதனுண்மை தெரியவே உன்னைக் கேட்டுத தெரிந்தேன். நீயும் பலவிடங்களில் புதையல் செய்துவிட்டுச்சிறிதுதெரிவித்தாய்- ஆகிலும் சில வார்த்தைகள் சொல்லியபின் போகக்கடவாய்.

தமிழ்வேமென்னும் திருக்குறளில் உங்கள் விஷயங்களைக் கண்டித்துத் தமிழ் மகனாகிய தெய்வப் புலமை திருவள்ளுவர் கூறுவதைக்கேள்.

"அவிசொரிந்தாயிரம் வேட்டலின்ஒன்றன்
உயிர்செகுத்துண்ணாமை நன்று"

"நன்றாகுமாக்கம் பெரிதெனினுஞ் சான்
றோர்க்குக் கொன்றாகு மாக்கங்கடை"

"உயிருடம்பினீக்கியாரென்பர் செயிருட
ம்பிற் செல்லாத்தீ வாழ்க்கையவர்"

"அறவினையாதெனிற் கொல்லாமை,கோ
றல் பிறவினை யெல்லாந்தரும்."

என்ற முதுமொழியின் கருணையைக்கண்டனையோ? இப்படிப்பட்ட ஆபாசமான யாகங்கள் சிறுதெய்வ வழிபாடுகள் கூறுங்கூற்றுக்களைத் தமிழ்மக்கள் கற்றால் உமது நூல்களைக்கையால் தொடவும் விருப்புவாரோ! இதற்காகத்தான் வேதத்தைப் பார்ப்பனர்தவிர மற்றவர்கள் படிக்கொணாதென்ற கட்டுப்பாடுபோலும்- நண்பனே, நீ அந்த அநியாயமான கொலைகளத்திற்குப் போகாதே.

கிரு— அன்ப,உன்போதனை கேட்டதும் அவசியம போகவேணுமென்ற ஈர்ப்புஎன்னைவிட்டுநீங்குகின்றது- உனக்கு ஒன்றுந்தெரியாதென்றும் உங்களவர்களுக்கு சாஸ்திரங்கள்கிடையாதென்றும் எங்களவர்கள் சொல்வதைக்கேட்டுமயங்கினேன- உங்களுக்குரியதென்க் கொண்டிருக்கும் தமிழ் வேதத்தின் ஆழ்ந்தநோக்கின் பெருமையை இந்நான்கு செய்யுட்களாலேயே கண்டுகொண்டேன்- உன்னோடுபேசிய தன்பயனாய் அவ்விடத்திற்குப்போக அருவருப்பாயிருக்கின்றது- மற்றவை நாளைப்பேசுவோம். வந்தனம்

மலையாளம், தென் கன்னடம், தமிழ் ஜில்லா அர்பன் பாங்குகளின் முதல் மகாநாடு,

இம்மகாநாடு, சென்னை மாகாண மாஜீ மந்திரி கனம் ஏ, ரங்கநாத முதலியாரவர்களின் தலைமையின் கீழ் ஈரோடு அர்பன் பாங்கிக கட்டிடத்தில் அக்டோபர் 20ம்நாள் மாலை 2 மணிக்கு நடைபெற்றது- பல இடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. எஸ். இராமநாதன் எம். ஏ. பி எல். அவர்கள் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் நோக்கத்தைப் பற்றியும், மற்ற கக்ஷிகளுடைய நோககத்தைப் பற்றியும் வெகு விரிவாகப் பேசினார்.

பிறகு திரு நாயக்கர் பெருத்தகரகோஷத்தினிடையே பார்ப்பனரல்லாத இயக்கத்தின் சரித்திரத்தைப் பற்றிப் பேசினார். இவ்வியக்கம் சென்ற 12 வருடங்களுக்கு முன்னால் நம் நாட்டில் தோன்றி இராவிடில் ஏகபோக மிராசுதார்களான பார்ப்பனர் கூட்டம் பிராமணரல்லாதாரை நசுக்கி இருப்பார்களென்றும், பிராமணரல்லாதார்முன்னேற்றத்திற்கு விரோதமாக பல சங்கங்களிருப்பினும் அதைப் பொருட்படுத்தாதுநாம் விடாமுயற்சியுடன் நம் வேலையைச்செய்யவேணுமென்றும், நேரு ரிப்போர்ட்டை நாம் ஆதரிக்கக்கூடாதென்றும், காங்கிரஸ் காரர்களில் சிலர் சைமன் கமிஷனை ஜனங்கள் போரால் பஹிஷ்காரம் செய்வதாக ஏமாற்றி வருவதைக் கண்டித்தும் பேசினார். பின்னர் பெருத்த கரகோஷத்தினிடையே நலவுரிமைச்சங்கத்தின் கட்டிடத்தைத் திறந்து வைத்தார், பின்னர்காரியதரிசி டி நாராயண பிள்ளை அவர்களால் வாழ்த்துக் கூறப்பட்டு கூட்டம் கலைவுற்றது. கூட்டம் ஆரம்பிக்குமுன் திண்டுக்கல் வி. கே. வாழவந்தான் சுயமரியாதைப் பாடல்களைப்பாடினார். இரவு 11 மணி வண்டிக்கு நாயக்கர் ஈரோட்டுக்குப் புறப்பட்டார்,

ரயிலுக்கு சேர்மென் திரு ஆர் எஸ்நாயுடு கவுன்சிலர்கள் கோபாலகிருஷ்ணக் கோனார், கூடலிங்கம் பிள்ளை, முத்து காமாக்ஷி பிள்ளை சோலை முதலியார் கண்ணாயிரம முதலியார் அருணாசலம் பிள்ளை, பொன்னையா, சோளவந்தான், சுப்பிரமணிய முதலியார், வெங்கிடசாமி அய்யா கொண்டய்ய நாயுடு மற்றும் சுமார் 50 பேர்களும் வந்திருந்தார்கள்,

---

பம்பாய் முனிசிபாலிட்டியில் சுயமரியாதை உதயம்

மனுவம்சத்தின் ஆத்திரம்

பம்பாய் முனிசிபாலிட்டியார், முனிசிபல் பள்ளிக்கூடங்களில் சாதிவேற்றுமை பாராட்டக்கூடாதென்ற தீர்மானம் நிறைவேற்றியிருந்ததை வாசகர்கள் அறியலாம். இதைக் கண்டு ஆத்திரங்கொண்ட பார்ப்பனர் முனிசிபாலிட்டியின்மேல் கண்டனத் தீர்மானம் கொண்டுவந்து கடைகளையும் அடைக்கச் செய்திருப்பதாக அறிகிறோம். ஆகவே இதிலிருந்து சமூக சீர்திருத்தத்துக்கு சர்க்கார் விரோதிகளல்லவென்பதும் சுயநலபார்ப்பன கூட்டத்தாரே தடையாயிருக்கிறார்களென்பதும் இத்தகைய கூட்டத்தாரை ஒழிக்க வேண்டியதே நம்முடைய முதற்கடமையென்பதும் விளங்கவில்லையா?

பார்ப்பனீயம் ஒழிந்த சடங்கு

நிகழும் புரட்டாசி மாதம் 14 தேதியன்று லாலுகுடி தாலூக்கா சாத்தமங்கலம் கணேச முத்துராஜா அவர்கள் தம் அன்னையார் திதியை புரோகிதமின்றி நடத்தி அன்பர்கள் பலருக்கு அன்னமளித்தார்.

இராமாயணமும் சாமி சகஜானந்தமும்.

[திரு. இராவணதாசன்.]

சிதம்பரம், சன்மார்க்க சபையில் தலைமை வகித்துப் பேசிய ஸ்வாமி சகஜானந்தமவர்கள் இராமாயணத்தைப்பற்றி பேசுங்கால் "ராமாவதார மென்றால் துஷ்டர்களுடைய பாபமும் நல்லோர்களுடைய புண்ணியமும்தான் ராமாவதாரம், ஆத்ம ஸ்வரூபத்தில் மறப்பு இல்லையென்றால் வினைக்கேடாகப் பிறப்பதில்லை, நமக்கெல்லாம் ஆத்மஸ்வரூபத்தில் மறப்பு உண்டு, ராமாயணத்தின் தத்துவத்தை உணராதவர்களே ராமாயணத்தை தூற்றுவார்கள்." என்று கூறியுள்ளார்.

ஆ! ஸ்வாமிகளின் தத்துவமே தத்துவம்! ராமாவதார மென்பது துஷ்டர்களுடைய பாவமும் நல்லோர்களுடைய புண்ணியமு மென்றதினால்தான் ஒரு துஷ்டனாகிய சூத்திரன்-பார்ப்பானின் வைப்பாட்டி மகன்-கடவுளை நோக்கித் தவஞ்செய்ததற்காக ஆரிய ராமன் அவனை வெட்டி வீழ்த்தினான் போலும். பள! பளா!! தத்துவம் பேசிய நமது ஸ்வாமிகள் இராமாயண காலத்தில் இருந்திருப்பாரேயாகில் இவர்யாராக இருப்பாரென்பதை நாம் கூறவேண்டியதில்லை. ஏன்? இவ்விருபதாம் நூற்றாண்டிலும் இவர் ஸ்வாமிகளாக இருப்பது எந்தத் தத்துவத்தால்? என்பதை ஸ்வாமிகளுடைய ஆலோசனைக்கே விட்டுவிடுகின்றேன்.

இராமாயணப் பிரசங்கி ஒருவன் முதல் முதலில் என்னகூறுகின்றானென்பதைக் கவனிக்கவேண்டும். தசரதமன்னன் மந்திரிமார்களை நோக்கி "மந்திரிகாள்! நமதுதேசத்தில் உள்ள பிரம க்ஷத்ரிய வைசிய சூத்திர ஆகிய நான்கு வர்ணத்தார்களும் தங்கள் தங்கள்கடமைகளைச் சரிவர நடத்திவருகின்றார்களா?" என்று கேட்பதாக கூறுகின்றான். இதற்கு நமது ஸ்வாமிகள் என்ன தத்துவம் கூறப்போகின்றார்? அப்படி ஏதாவதொரு தத்துவம் கூறுவாரேயாகில் அத்தத்துவத்தின்படி இவருடைய கடமைஎன்ன? இவருடைய கடமைப்படி நடக்கின்றாரா? இவர் ஸ்வாமிகளானது எந்த ராஜபத்தில்? ராமராஜபத்திலா? வெள்ளைக்கார ராஜ்பத்திலா? பாவம்! பாவம்!

ஜாதித் திமிர்கொண்ட அயோக்கியர்களையும் பொய்ப்புராணங்களையும் கூறி வயிறுவளர்க்கும் சோம்பேறி மந்தைகளையும் நாட்டில் உற்பத்தி செய்துவருவது இராமாயணமே என்பதை நாம் மலை மீதிருந்தும் கூறுவோம். ராமாவதாரத்தின் ஆத்மஸ்வரூபமும் நமது சுவாமிகளின் தத்துவமும் இங்கு யாருக்கு வேண்டியது. காலச் சக்கரத்தின் வேகத்தை அறியாத பழய புராண புழுகுகளுக்குத் தத்துவம் கூறுவது "காலமறிந்து நடவாதான் கோலமறியாக் குரங்காவான்" என்ற தமிழ் நாட்டுப் பழமொழியையே மெய்ப்பிக்கின்றது.

நடு நிலைமை

வாதி சொல்வதற்கும் பிரதிவாதி சொல்வதற்கும் மத்தியில் "முயலுக்கு மூன்றரைக் கால்" என்பது போல் தீர்ப்புச்செய்வது நடு நிலைமை ஆகாது. சமஸ்த மக்களுக்கும் எந்நிலைமையில் நியாயம் இருக்கிறதோ அந்நிலையே நடுநிலைமையாகும். இந்நடுநிலைமை உள்ளாரே சான்றோர் எனப்படுவர். இதை நிரூபிக்கவே வள்ளுவரும் "சமன் செய்து சீர் தூக்குங்கோல் போல் அமைந்தொரு பாற் கோடாமை சான்றோர்க்கணி" எனக் கூறியுள்ளார். அவர் கருத்தை விளக்குவாம்.

அதாவது, கோல் என்னும் மக்கள் சமன் என்னும் அடையாளமாகிய நடுநிலைமையைக் கொண்டு காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து சமரசத்தை அளித்தலாகும். இவ்வண்ணம் ஒழுகுபவனே சான்றோன் எனப்படுவான். இதையுன்னியே கம்ப நாட்டாரும் "வாய்மையும் வழக்கும் காத்து மன்னுயிர் புரந்த வள்ளல்" என சொல்லா நின்றார். இக்கருத்தின்படி நீதி செலுத்துவதே குடி அரசு எனப்படும். அன்பர் ஈ. வி. ராமசாமியால் நடத்தப்படும் இக்'குடி அரசு' பாராளுமன்றென மக்களை மாக்களாக்காது செங்கோலோச்சி வருகின்றது. இல்லையேல் "சான்றோரில்லாத் தொல்பதி யிருத்தலின் தேன்தேர் குறவர் தேயம் நன்றே" என்ற நறுந்தொகையின் பிரகாரம் நடுநிலைமையுடையோர் இல்லாதவிடங்களில்வசிப்பதைவிட வனங்களில் வசிப்பது மேல். கொடிய பார்ப்னீயக் கொள்கைக்கும் அக்கொள்கையுடைய பண்டிதர்களுக்கும் இரையாவதைவிட ஓநாய்களுக்கும் நரிகளுக்கும் இரையாவது மேல். இதை அறிந்திருந்தும் "கன்னலங்கழனி நாடு நன்னகருங் கருதியான்செய் தவம் விட்டு மன்னவனுக வல்லனோ" என்று கௌசிகர் கூறியபடி சில பாண்டித்திய முள்ளாரும் வாளாக்கிடக்கின்றார்கள். வாளாக்கிடப்பதென்னை? எற்றுக்கு? என நினைக்கும் போழ்து காலையில் தவழ் செல்வி தவழ்ந்து விளையாடுஞ் சமயத்து தன் நிழலில் சுருள் மயிர் தொங்கலைப் பார்த்து எட்டிப் பிடிக்கப் போவதும், நிழலும் எட்டிப் போய்விடுவதும், குழவி ஏமாறுவதையுங் கண்டதாயானவள்சேய்மேனிரங்கி அதன் முஷ்டியைப்பிடித்து அதன் குஞ்சியில் வைக்க குழந்தை தன் மயிரைப் பிடித்து சாயலைக் கண்டு சந்துஷ்டி கொண்டது. தன்னிடங் குடி கொண்டுள்ள சக்தியை குழவி அறியாத தன்மை போல், தற்போழ்துபார்ப்பனீயத்தில் மயக்குண்ட பண்டிதரும் பாமரரும் ஆன்ம சக்தியை உணராது திருச்செந்தூரென்றும் மதுரையென்றும் இராமேஸ்வரமென்றும் இராப்பகலாய் அலைகின்றனர். இதையே தாயாகிய 'குடி அரசு' தடுத்து ஆன்ம சக்தியையும் அறிவுக்கலையையும் உணரச்செய்கின்றது. இதையே 'குடி அரசின்' நடுநிலை என்பாம். இந்நடுநிலை தவறாது நாமும் குடி அரசாவோம்.

வேல். வெள்ளசாமி,

கீழ சரூப்.

திருச்சி ஜில்லா போர்டுக்கு மற்றொரு விண்ணப்பம்

லாலுக்குடி போர்டு உயர்தாபாடசாலையின் மாணவர்கள் டிை பாடசாலைக்கு ஏற்கனவே வந்து கொண்டிருக்கும் ஹிந்து, சுதேசமித்திரனுடன் ஜஸ்டிஸ், திராவிடன் ஆகிய இரண்டு பத்திரிகைகளையும் சேர்த்து வரவழைக்கல் வேண்டும் என ஜூலை மாதம் 20 தேதி ஒரு விண்ணப்பம் போர்டுக்கு அனுப்பினார்கள். டிை விண்ணப்பம் அனுப்பி இரண்டு மாதமாகியும் பத்திரிகைகள் அனுமதிக்கப் படாமையால் செப்டம்பர் மாதம் 23ந்தேதி பெருவாரியான மாணவர்களுடன் கையொப்பமிட்டதுடன் மற்றொரு விண்ணப்பமும் அனுப்பியதாகத் தெரிகிறது.

ஆகையால்நாட்டாண்மைக்கழகத்தலைவர் பிராமண ரல்லாதாராயிருந்தும் முதல் விண்ணப்பத்தை டிை போர்டின் ஆதிக்கத்துக் குட்பட்டிருக்கும் சில பார்ப்பனர்களது சூழ்ச்சியை ஏற்று அசட்டை செய்து விட்டதாகத் தெரிகிறது.

ஆகவே திரு. பிள்ளை அவர்கள், மாணவர்களது இரண்டாவது மனுவுக்கு முன்போல் சூழ்ச்சிகள் வர நேர்ந்தாலும் அதை நிராகரித்து பெருந்தன்மையுடன் மாணவர்களது வேண்டுகோளை பூர்த்தி செய்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

கா. செங்கனார், பூவாளூர்.

காலஞ்சென்றார்கள்.

ஈரோடு முனிசிபல் கவுன்சிலரும், பிரபல நூல்வியாபாரியுமான திருவாளர் T.R சின்னப்பமுதலியார் அவர்கள் நிகழும் விபவவருடம் புரட்டாசி மாதம் 28ம் நாள் சனிக்கிழமையன்று திருச்செங்கோட்டில் தமது இல்லத்தில் மண்ணுலகை நீத்தார்.

சென்ற 10உ 7 மணிக்கு சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பல சுவாமி மடம் அதிபதி ஸ்ரீலஸ்ரீ பரஞ்ஜோதி சுவாமிகள் 10 நாளாய் சுரத்தால் பீடிக்கப்பட்டு ஜோதியில் கலந்தார். அவர் தேகம் பக்கத்து புத்தூர் ஆச்சிமடத்தில் திரு ப. வேணுகோபால் பிள்ளை நன்முயற்சியால் சிஷ்யகோடிகளால் அடக்கம் செய்யப்பட்டது. இவர் தேசாபிமானியும் மதாபிமானியும் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டவரும் ஆவர். பெரிய தர்ம சிந்தனையுடையவர்.

பரிதாப மரணம்

நன்னிலம் வடக்குவீதி வெள்ளைவர்ணப்பிள்ளையார் கோவிலுக்கு தென்புறமாயுள்ள வேப்பமரத்தின் கிளையொன்று 9—10—28 மாலை 4-மணி சுமாருக்கு முறிந்து, திருவிடமருதூர் திரு. கோவிந்தசாமி பத்தர் மகன் சுமார் 12 வயதுள்ள ராமச்சந்திரன் என்ற சிறுவன்மீது விழவே, கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சிறுவன் மரணமடைந்தான் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

> தாழ்த்தப்பட்டவர்களை சகோதரராகவும் சமத்துவமாகவும் நடத்தும்வரை சுயராஜ்யம் கிடைப்பது அரிது.
>
> வீரய்யா.

பார்ப்பன வெடி குண்டுகள்

காலதேச வர்த்தமானங்களுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் தகுந்தாற்போல், மக்கள் மாறுதலடைய வேண்டியது அவசியத்திலும் அவசியம். அப்படியின்றி, இன்னும் பழைய குப்பைமேடுகளைச் சுற்றிக்கொண்டு, மதபோச்சு, நாஸ்திகமோச்சு என்ற பழைய பல்லவிகளைப் பாடிக்கொண்டு இருப்பதானது, தங்களைத் தாங்களே தற்கொலை செய்வதுடன் தேசமக்களையும் கொலை செய்வதற்கொப்பாகும்.

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் ஒரு பறவை என்ன நிலைமையிலிருந்ததோ அதே நிலைமையில் இன்னும் இருக்கிறது. ஆனால் மனிதர்களோ முன்போல் குகைகளிலும், புதர்களிலும் வசிக்காமல், தற்சமயம் மாடமாளிகைகளிலும்கூடகோபுரங்களிலும் வசிப்பதுடன் முன்காலத்தில் இல்லாதவிசேஷ சௌகரியங்களுடன் வசிப்பதைப்பார்த்தால், பறவைகளைவிட மிருகங்களைவிட ஒரு விசேஷ சக்தி மனிதனிடம் இருக்கிறதென்பதில் ஐயமில்லை,

ஆனால் அப்பேர்ப்பட்ட கிடைத்தற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றவர்களில், விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய ஒருசிறு படித்த கூட்டத்தார், தங்களிடமுள்ள விசேஷ அறிவைக்கொண்டு பழைய குப்பைமேடுகளை கொஞ்சமும் சட்டைசெய்யாமல் உதறித்தள்ளிவிட்டு முன்னேறிப் போவதும், தாங்கள் ஏகபோகமாக அநுபவித்துக்கொண்டிருக்கிற உத்தியோகங்களுக்கும் ஆதிக்கத்துக்கும் ஆபத்து வரக்கூடுமென்று நினைத்து சாஸ்திர முதலியவைகளின் மூலம் பாமரமக்களை ஏமாற்றி, வஞ்சிப்பதும் எவ்வளவு வடிகட்டின சுயநலமாகும்.

மேல்நாட்டாருடைய வெடிகுண்டுகளோ நம்மை உடனே அழித்துவிடக்கூடிய தன்மையுள்ளவை. அதில் ஒருபாதகமு மில்லை. ஏனெனில் அது பட்ட ஒரு சிலரைத்தான் அழிக்கமுடியும்: ஆனால் நம்மீது எறியப்பட்டிருக்கிற பார்ப்பன வெடிகுண்டுகளோ, இனிமேல் பிறக்கக்கூடிய ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரின் பின் சந்ததிகளையும் அழிக்கக்கூடிய தன்மையிலிருக்கிறது, அந்தோ என்ன அநியாயம்; பார்ப்பன வெடிகுண்டுகளுக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது பாருங்கள்!!

ஆனால் சுயமரியாதை இன்றி, உதைக்கிற காலுக்கு முத்தமிட்டுக் கொண்டிருக்கிற ஒரு சில பார்ப்பனரல்லாத பதர்கள் "என்னையா, இவ்வளவு காலமாக சும்மா இருந்துவிட்டு நம் பிராமணசகோதரர்கள் மீது குறைகூறிக் கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் உங்களைப்படிக்கவேண்டாமென்று சொன்னார்களா?" என்று தற்சமயந்தான் யோகநிஷ்டையிலிருந்த ஞானிகள்போல் கேள்விகேட்கிறார்கள். அந்தோ என்ன அறியாமை!

நான் முன் எழுதியவியாசத்தையும் தற்சமயம் இதற்கு முன்னும் பின்னும் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களையும மேல்நோக்காக குறுகிய திருஷ்டியுடன் பார்ப்பவர்கள் பிராமண சமூகத்தை நான் அடியோடு நாசமாக்கி இருப்பதாக நினைத்து ஏமாந்து போகவேண்டாமென்று எச்சரிக்கிறேன். பிராமண சமூகத்தில் ஸர். டி. சதாசிவ அய்யர் போன்ற உத்தமர்கள் பலர் இருக்கிறார் என்பது நமக்குத்தெரியும்: சுயமரியாதை உள்ள பார்ப்பனரல்லாதார் ஒவ்வொருவரும் ஸர், டி- சதாசிவ அய்யர் போன்ற பிராமண உத்தமர்களை இன்னும் வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். இனி என்றும் வாழ்த்திக்கொண்டிருப்பார்கள் என்பதை வைதிக பேய்பிடித்த பார்ப்பனர்களும் அவர்களது வால்களும் மனதில் நன்றாய் பதியவைத்துக் கொள்வார்களாக!

மழைக்குக்கூட ஒருசமயம் பள்ளிக்கூடங்களில் ஒதுங்காத உருவங்கள் இவ்விதம் சொல்லும் பக்ஷத்தில், பலநீதிசாஸ்திரங்களை தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிற பீரோவை போன்று பலவற்றை மனதில் வைத்திருக்கிற அங்குமிங்கும் அசையக்கூடியபீரோவிடமிருந்து நாம் என்ன எதிர்பார்க்கமுடியும்.

பார்ப்பனரல்லாதாராகிய நாம் இந்த 2500 வருஷங்களாக படிக்கக்கூடாது. உத்தியோகம் பார்க்கக்கூடாது என்று கையைக்கட்டிக் கொண்டு சும்மா இருந்தோமா? அல்லது பார்ப்பன வெடிகுண்டுகளால் தடுக்கப்பட்டிருந்தோமா? என்பதை மூலை விட்டிலிருந்து வெளிவந்து தங்களறிவுக்கதவை சற்று திறந்து வைத்து ஆலோசனைசக்தியை பிரயோகித்துப் பார்த்தால் ஒரு மடச் சாம்பிராணிகூட விஷயந்தெரிந்து கொள்ளக்கூடும்.

பார்ப்பனரல்லாதவராகிய நாம் 2500 வருஷங்களுக்கு முன்னேபடிக்க இஷ்டமில்லாதிருந்திருப்போமாகில், சூத்திரர்கள் என்று கருதப்படுகிற நாம் வேதங்களைப்படிக்க கூடாதென்று அக்காலத்திலே ஒருசட்டம் செய்யவேண்டிய அவசியமே இல்லை. இதிலிருந்து ஞாபகத்திற்கு எட்டாத வெகுகாலத்திற்குமுன்பே நாம படிக்க ஆவல்கொண்டோமென்பதில் சந்தேகமே யில்லை. அச்சமயத்தில் மூடநம்பிக்கையே உருவாகக் கொண்ட நம் தமிழ்நாட்டு அரசர்களை அயோக்கியபார்ப்பனர்கள் பயத்திலும் நயத்திலும் அதற்கும் சாத்தியப்படாவிட்டால் தங்களருமை இன காமப்பொருளை கொடுத்தாவது ஏமாற்றி தங்கள் இஷ்டம்போல் 'சூத்திரன் படிக்க கூடாது' என்ற சட்டத்தை இயற்றி சுமார் 2000-வருஷ வரை அநுஷ்டித்து கடைசியில் வழக்கம் பழக்கம் என்ற முறைக்கும் யாற்றிவிட்டார்கள்.

முன்னால் நாகரீகத்தில் சிறந்து, வியாபாரம் கலவியில் தேர்ச்சிபெற்று, ரோம் கிரீஸ் நாடுகளுடன் வியாபார போக்குவரத்துசெய்துகௌரவத்துடனும் சுயமதிப்புடனும் இருந்தநம்மை சூழ்ச்சியால் நம் எலும்பிலும் கூட மூடநம்பிக்கை ஊறும்படி செய்து விட்டார்கள். ஏதோ தற்செயலாய் பிரிட்டிஷ் கவர்ண்மெண்டு ஏற்பட்டது

அதன் பயனாக நாமும் சுயமரியாதையுடைய மனிதனுக்கக்கூடுமென்ற ஒருசிறிது நம்பிக்கையாவது உண்டாக இடமுண்டாயிற்று. தற்சமயம் புத்தியையும் பலத்தையும் அடிப்படையாகக் கொண்ட பிரிட்டிஷ் ராஜாங்கத்தையும் கூட நம் தமிழ் ராஜாக்களை ஏமாற்றியது போல் பல வகைகளிலும் ஏமாற்றி ஒவ்வொரு டிபார்ட் மெண்ட்களும் பார்ப்பன வெடிகுண்டு சாலைகளாக இருப்பது கவர்ன்மெண்ட் உத்தியோக அறிக்கைகளைப் பார்த்தால் தெரியவரும்.

பார்ப்பன வெடி குண்டுகளை விட பலம் வாய்ந்த வெடிகுண்டுகள் நமக்கு அநுசரணையாக இருக்கக்கூடிய இந்த சமயத்திலே நாம் இவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருந்தால், நமக்கு ஒரு சிறு துரும்புகூட ஒத்தாசை இல்லாத அக்காலத்தில் நாம் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கக் கூடும் என்பதை விஸ்தரித்து எழுதுவதற்கு ஏற்ற பதங்கள் எந்த பாஷையிலும் தற்சமயம் கிடையாததால் சித்ரவதை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட ஒருவனுடைய மனசு எவ்வளவு கஷ்டப்படுமோ அப்படியே இருக்கக்கூடுமென்று ஒருவாறு நம் வாசகர்கள் யூகித்துக் கொள்ளுமாறு விட்டு விடுகிறேன். என்ன அபாயம்! எவ்வளவு பயங்கரம்!!

இப்பேர்ப்பட்ட 'ஞாயசிலர்கள்' நமக்கு சுயராஜ்யம் வாங்கிக் கொடுப்பதாக சொல்லும் போது "ஆட்டுக்குட்டி நனைகிறதென்று ஓநாய் ஓலமிட்ட" கதையே நம் ஞாபகத்துக்கு வருகிறது. உண்மையில் ஆட்டுக்குட்டிக்காக ஓநாய் பரிதாபப்பட்டிருக்கக் கூடுமென்று நினைக்கிறீர்களா? இருக்கவே இருக்காது- அதுபோல் அயோக்கிய அரசியல் பார்ப்பனர்களால் நமக்கு ஒருகடுகளவு நன்மை கூட கிடைக்காது என்பது நிச்சயம். ஆனதால் சுயமரியாதையுடைய ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் நாட்டின் நலத்தை முன்னிட்டு வரும சைமன் கமிஷனை அன்புடன் வரவேற்று நம்முடைய குறைகளை எல்லாம் விஸ்தாரமாக சொல்லுவதுடன் அன்னவர்களை நேராக கூட்டிக் கொண்டு போய் நமக்கு கஷ்டங்கள் உள்ள இடங்களை எல்லாம் காண்பித்து வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் இன்னும் கொஞ்ச காலத்துக்கு கட்டாயம் இருக்க வேண்டுமென்பதை ருஜு செய்து விட வேண்டும்.

K S. நாராயணன்.

சைமன் கமிஷனுக்கு ஆதரவு.

அய்யம்பேட்டை பிரபல வியாபாரியும் யூனியன் போர்டு அங்கத்தினருமான ஆர். வ. ஜப்பார் சாகிப் அவர்கள் மார்சேல்ஸ் துறைமுகத்திலிருந்து பம்பாயில் 12-10-28ல் மாலோஜா கப்பலில் வந்திறங்கிய இந்திய சீர்திருத்தக் கமிஷன் தலைவரான சர். ஜான் சைமன் துரை மக்களுக்கு கீழ்க் கண்ட தந்தியை அனுப்பியுள்ளார்.

"அய்யம்பேட்டை முகம்மதியர்கள் சார்பாக நான் உங்களை மனப் பூர்வமாக வரவேற்கின்றேன்.

தஞ்சை ஜில்லாவிலுள்ள அய்யம்பேட்டைக்கு தாங்கள் விஜயம் செய்ய வேண்டுமென்று முஸ்லீம்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றார்கள்.

ஒரு நிருபர்.

தஞ்சை தாலூக்கா போர்டு தேர்தல்

நமது வெற்றி

தஞ்சைத் தாலூகா போர்டில் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பெற்ற திரு. த. வெ. உமாமகேசுவரம் பிள்ளையின் தேர்தல் செல்லத்தக்கதன்றென தாலூக்கா போர்டு உறுப்பினர் திரு. சீதாபதிநாயுடு அவர்கள் வழக்குத் தொடுத்திருந்தார். அவ்வழக்கு விசாரணை முடிந்து உமாமகேசுரம் பிள்ளையின் தேர்தல் சட்டப்படி செல்லத் தக்கதல்லவென்று சப் கோர்ட்டில் தீர்ப்பாயிற்று. அதன் பின் மீண்டும் சென்ற 15—10—28 ல் நடந்த தலைவர் தேர்தலில் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களே தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். திரு. பிள்ளையவர்களுக்கு 13 ஓட்டுகளும் அவரை எதிர்த்து நின்றவருக்கு 5 ஓட்டுக்களும் கிடைத்தன. திருவாளர் பிள்ளையவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதை நாம் பாராட்டுகின்றோம்.

பெ. புதுப்பட்டியில் சுயமரியாதை மகாநாடு.

11—10—28 ல் மாலை 7 மணிக்கு இவ்வூரில் ஓர் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. சுயமரியாதைச் சங்கத்தவர்களும் பொது மக்களும் பெண்களுமுள்பட திரளாகக் குழுமியிருந்தனர். திரு. கருப்பையா பிள்ளையவர்கள் அக்கிராசனம் வகித்து சுயமரியாதை இயக்கத்தின் தத்துவங்களைப் பற்றியும் திரு. எஸ். வி. லிங்கம் அவர்கள் சமூக சீர்திருத்தமென்னும் பொருள்பற்றியும திரு. அழகர்சாமி நாயுடு அவர்கள் 'சுயமரியாதை' என்னும் பொருள்பற்றியும் இனிய பிரசங்கம் செய்தார்கள். அதன் பின் தலைவர் முடிவுரையாக மாகாண சுயமரியாதை மகாநாட்டை நடத்தவேண்டுவதின் அவசியத்தைப் பற்றிப் பேசிப் பின் இரவு 11-30 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

பினங்கு சமரச வாலிபர்சங்கம்

மேற்படி சங்கத்தின் ஆதரவில் 2-10-28ல் மாலை 8-30 திருவாளர் ஸ்ரீமான் பிரகாசம் அவர்கள் தலைமையின்கீழ் ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது சுமார் 350 ஜனங்களுக்குமேல் விஜயம்செய்திருந்தனர். ஸ்ரீமான் லரயர் கே. என். பிள்ளை அவர்கள் ஒற்றுமை, சுயமரியாதை,வாலிபர்முன்னேற்றம், இவைகளைப்பற்றி மிக அழகாக பேசினர். சிற்றுண்டி வழங்கப்பட்டு இரவு 11-மணிக்கு கூட்டம் கலைக்கப்பட்டது. வெங்கடரமணசாமி.

பார்ப்பனீயம் ஒழிந்த சடங்குகள்

1 தமிழ்ப்பண்டிதரும்,சித்தவைத்தியருமாகிய திருவாளர் மோசூர் சண்முக முதலியாரவர்கள் தலைமுறை தலைமுறையாகப் பார்ப்பனப் புரோகிதரைக்கொண்டே நடத்திவந்த மாளய அமாவாசையை இவ்வருடம் அவ்வித புரோகிதமுமில்லாமல் ஈ. வே. ரா. நாயக்கரவர்களின் "குடி அரசு" கொள்கையாகிய சுயமரியாதைக் கொள்கைப்படி பந்துக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமளித்து முடித்தார்.

2 ஸ்ரீவைகுண்டம் நடுத்தெருவிலிருக்கும் சுப்பிரமணிய பிள்ளையவர்கள் தமது தந்தையின் வருஷ திதியை நாளது வருஷம் புரட்டாசி மாதம் 18 தேதி புதவாரமன்று, பார்ப்பனப்புரோகிததை அறவே ஒழித்து இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக பந்துமித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமிட்டு முடித்தார்கள்.

3 நாளது 1928ஹு செப்டம்பர்மீ 29-வ சனிக்கிழமையன்று மைலாடுதுறை திரு. கிருஷ்ணசாமி பத்தர், காலம்சென்ற தமது தாயார் அவர்களின் திதியை எவ்வித புரோகிதமுமின்றி பந்துமித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமிட்டு முடித்தார்.

4 சித்தோடு, செங்குந்த மாபினரும் பிரபல வ்யாபாரியுமான திருவாளர் க. முத்துசாமி முதலியார் அவர்கள் தமது தாய் தகப்பனுடைய திதி சடங்குகளை பார்ப்பனீயமும் புரோகிதமுமின்றி முறையே 1—10—28 லும் 14—10—28 லும் பந்துமித்திரர்களுக்கு விருந்திட்டு சிறப்பித்தார். இதுபோலவே இனி நடக்தப்போகும் விவாஹங்களிலும் பார்ப்பனீயத்தை அறவே ஒழித்து சுயமரியாதையுடன் நடத்துவதாய் தீர்மானம்கொண்டிருக்கிறார்.

5 லாலுகுடி தாலூகா, எசனக்கோரை என்னும் கிராமத்திலே திரு. பி. பிச்சையாமுத்து தமது தந்தையின் திதியை 12-10-28ல் சுயமரியாதை திதியாக நடத்தி அங்கு வந்திருந்த பந்துமித்திரர்களுடனும் சில மகமதிய சகோதரர்களுடனும் சமபந்திபோஜனம் செய்தார்.

6 அருப்புக்கோட்டை தாலூகா, வெள்ளையபுரம் கிராமத்தில் திரு. டி. சு. ராமகிருஷ்ண ரெட்டியார் தம் பாட்டனாரின் திதியை 13—10—28ல் பார்ப்பனரின்றி சுயமரியாதையுடன் நடத்தி ஏழைகளுக்கு அன்னம் அளித்தனர்.

7 மேற்படியூர் திரு. ம. சு. சீனி ரெட்டியார் தன் தகப்பனர் நாராயண ரெட்டியார் திதியை 13-10-28ல் மேற்கண்டபடியே நடத்தினர்.

8 பெரியகுளம்தாலூகா ஸ்ரீரங்கபுரத்தில் ஸ்ரீமான் ம. வெ. ஸ்ரீனிவாச நாயக்கர் காலஞ்சென்ற தமது தகப்பனரின் ஆண்டுவிழாவை நாளது புரட்டாசித் திங்கள் 26ம் நாள் வியாழனன்று போலிப்பார்ப்பனீயத்தை நீக்கி, ஸ்ரீமான் வே. கி. பசுபதி நாயக்கர் அவர்களின் தலைமையின்கீழ் இனிது நடத்தி வைத்தார்.

9 ஸ்ரீமான் ம சி. ராமசாமி நாயக்கர் சுமார் 30 வருஷ காலமாக பார்ப்பனனைக்கொண்டு நடத்திக்கொண்டுவந்த தமது தகப்பனரின் திதியை பார்ப்பனப் புரோகிதத்தை அறவே நீக்கி, எவ்வித சடங்குகளுமின்றி, நாளது 10-11-28-ல் தம் நண்பர்களுடன் கொண்டாடினர்.

சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.

ரிஜிஸ்டர் M. No. 93. கஜலக்ஷ்மி டிரேட்மார்க.

சர்வரோகதும்லரஸம்.

சகலரோகங்களுக்கும் திவ்யாமிர்தமென லோகப்பிரசித்திபெற்ற மருந்தித ஒன்றே. பத்தியமில்லை அனுபானமில்லை. ஒரு அவுன்ஸ் ஜலத்தில் ஒருதுளி ரசத்தைவிட்டு சாப்பிட்டும் மேலே பூசியும் அதன் ஆச்சர்ய குணத்தை உடனே அடையலாம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத அபூர்வ குணமான குபேர பொக்கிஷங்களாகும்; கவலையுந்தீரும். அநேக கீர்த்திகளையும் நற்சாக்ஷி பத்திரங்களையும் பெற்றது. உண்மை அறிய ஒரே முறை பரீக்ஷித்துப் பாருங்கள். எப்பொழுதும் கைவிடமாட்டீர்கள். எல்லா இடங்களிலும் கிடைக்கும். புட்டி 1-க்கு விலை ரூ. 2—8—0. தபால் செலவு பிரத்தியேகம்.

தகுந்த ஏஜண்டுகள் தேவை. லார்டு அண்டு கம்பெனி சீர்காழி. (S. I. R.)

LORD & CO., SHIYALI. (S. I R.)

80 வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற

அஸல் ஷண்முகம் பட்டணம் பொடி.

காரம், மணம், நிறம், வாடை, குணம் அமைந்துள்ளது. எங்கள் உலகடிரேட்மார்க் பார்த்துவாங்குங்கள்.

(V. 120) ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட், போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்பாதகப் பார்ப்பனர்கள் இன்னும் உண்மையான கடவுளுக்கும், மக்களுக்கும் என்னென்ன துரோகம் செய்துவந்திருக்கிறார்கள்! வருகிறார்கள் என்பதை சிறிது ஆராய்வோம். இவ்வளவு குழாங்களுடனும் கூடிய அக்கடவுளுக்கு வருஷம் ஒருமுறை திருவிழாப்போட்டு மக்கள் பணத்தை வீணாக விரயம் செய்கிறார்கள். வருடமொரு முறை அச்செம்புக்கடவுளுக்கு கல்யாணம்செய்து வைக்கிறார்கள். கல்யாணம் செய்த மணமக்களாகிய கடவுள்களை சித்திரவேலைப் பாடுடன் செய்த பிரமாண்டமான ரதத்தில்வைத்து ஆயிரக்கணக்கான மக்களை இழுத்துக் கொண்டுபோகும்படி செய்கிறார்கள். கடவுள் பக்திக்காக வரும் எண்ணிறந்த மக்களை பெண்களாகிய வேசியர் பக்தியில் ஈடுபடச் செய்து மேகரோகமும் அரையாப்புக்கட்டியும்வாங்கச்செய்து மக்களை நாசஞ்செய்கிறார்கள். இப்பார்ப்பனர்கள் இதற்கென தனியாக லஞ்சமும் வாங்குகிறார்கள். என்னே! கொடுமை! கொடுமை!!

இத்தகைய கடவுள்களையே வீதிக்கொன்றாகவும், மாதத்துக்கொன்றாகவும், ஏற்படுத்தச் செய்து கடவுளின் பெயரையும் கெடுத்து மக்களின் பணத்தையும், நேரத்தையும் வீணாக்குகிறார்கள். இவ்வயோக்கியமான காரியத்தைச்செய்பவர்களும், அதைவணங்குகிறவர்களும் மோக்ஷத்திற்கு டிக்கட் வாங்கிக்கொண்டு போகிறார்களென்றும், மற்றவர்கள் நரகத்திற்கும்போகிறார்களென்றும் சொல்லி ஓர் பெரியஏமாற்று ஏமாற்றுகிறார்கள். அந்தோ! அக்கிரமம்!! அக்கிரமம்!!!

கனவான்களே! இவ்வீண் காரியத்திற்கும், முட்டாள்தனமான காரியத்திற்கும், மக்களின் பணமும், நேரமும் எவ்வளவு செலவாகிறதென்பதைக் கவனியுங்கள், இதற்கு செலவாகும் பணத்தையும் நேரத்தையும் மக்களுக்காக செலவழித்தால் நம் நாட்டில் தொழில் குறைவால் பஞ்சமேற்பட்டு தினமும் ஏராளமான ஏழைமக்கள் அந்நிய நாட்டிற்குக் குடியேறுவார்களாஎன்பதை சற்று சிந்தியுங்கள். நம்நாடு அடிமைத்தனத்தில் மூழ்கியிருக்குமா என்பதையும்ஆலோசியுங்கள்.

பார்ப்பனர்கள் குளிக்காமலும், ஈரத்துணியை மேலே துவட்டிக்கொண்டும், தாராளமாக அக்கல்லுக் கடவுளிடத்தில் போகலாம். ஆனால் லட்சக்கணக்கான ரூபாய்களைச்செலவழித்துக் கட்டினவர்களும், குளித்துப் பரிசுத்தமாயிருப்பவர்களுமாகிய பார்ப்பனரல்லாதாரெல்லாம் அக்கடவுளிடத்தில் போகவும் கோயிலுள் புகவும் கூடாதாம். ஏன்! அப்படிச்செய்தால் இவர்கள் வரும்படியும் குட்டும் கெட்டுப்போய்விடு மல்லவா? என்னே இவர்களின் சூழ்ச்சி! என்னே இவர்களின் வஞ்சகம்! பளா பளா! பள பளா!!

இதையெல்லாம் எடுத்து வெளியிட்டால் பார்ப்பனர்களும், சில அன்னக்காவடிகளும் மூடத்தெங்குகளும், நாய்க்கரையும் அவர்தம கூட்டத்தாரையும், நாஸ்திகர்களென்றும் மததுவேஷணைக்காரர்களென்றும் பழிசுமத்தி பழயமுட்டாள் தனத்தை நிலைநிறுத்தப் பார்ப்பது அஸ்திவாரமில்லாத கட்டிடத்தை மூப்பும் முட்டாள்தனத்தை ஒத்ததல்லவா? அதுவும் இவ்வாங்கில அரசாங்கத்தில், மக்கள் பகுத்தறிவை யடைந்துவரு மிக்காலத்தில் இப்பைத்யக்காரத்தனத்தை நிலைநிறுத்தப் பார்த்தால் இவர்களை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் அனுப்பவேண்டும். மகாத்மா காந்தியும் இதை போதித்துத்தான் 'தற்காலம் கடவுள் இருக்குமிடம் வேசியர் வீடு' என்று சொன்னார் போலும்.

பார்ப்பனரல்லாத இளஞ் சகோதரர்களே! அண்டப்புழுகும், ஆகாயப்புழுகும் முட்டாள் தனமுமான கொள்கைகளை ஒழிக்க இன்றே கங்கணங்கட்டிக்கொள்ளுங்கள். கடவுள் இருப்பிடமாகிய நடமாடும் காயிலிடத்தில் அன்பைச்செலுத்துங்கள்! செலுத்துங்கள்!! நியாயமும், சகோதரத்துவமும், சமத்துவமும் நிலைநிறுத்துங்கள்! நிலைநிறுத்துங்கள்!! பார்ப்பனர்களே! இனிமேலாவது இவ்வேமாற்றும் தொழிலைவிட்டு நியாயமான வழிக்கு வாருங்கள்! வாருங்கள்!! இல்லையேல் இதன்பயனாய் நீங்கள் கஷ்டப்படப்போவது திண்ணம்! திண்ணம்!! குருக்கள் பார்ப்பனர்களே! எச்சரிக்கை! எச்சரிக்கை!! முடத்தெங்குகளே! எச்சரிக்கை! எச்சரிக்கை!!

S. K. வரதராஜுலு.

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா தேசீய மஹாநாடு

ஷை தாலுகா 7-வது தேசீய மஹாநாடு நாளது அக்டோபர் மாதம் கடைசிவாரத்திலாவது அல்லது நவம்பர்மாதம் முதல்வாரத்திலேனும் ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெறும். மஹாநாட்டில் தலைமை வகிப்பதற்கு திருவாளர் ஆர். கே. ஷண்முகம்செட்டியார் பி. ஏ. பி. எல். எம். எல். ஏ. அவர்கள் அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மஹாநாடு கூடும் தேதி விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். நமது தாலுகா மகாஜனங்கள் யாவரும் போதியசிரத்தை எடுத்துக்கொண்டு மஹாநாட்டுக்கு விஜயஞ்செய்து நடத்திக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

காரியதரிசி.

பார்ப்பனீயம் ஒழிந்த திதி

நாகர்கோவில் ஒழுகினசேரி திருவாளர் சுடலையாண்டி வைத்தியர் அவர்கள் தந்தை விண்ணுலகுசென்ற பதினாறும் நாள் புரட்டாசி 24தேதி பார்ப்பனப் புரோகிதத்தை அறவே ஒழித்து சுயமரியாதையாக பந்து மித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னம் அளித்தார்.

எஸ். பகவதி

நீங்கள் அநேக மருந்துகளைச் சாப்பிட்டும் வியாதி தீராமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறீர்களா?

அப்படியானால் பழநி, சி. எம். சாமி,

குருதாம்பர பஸ்பம்.

சாப்பிடுங்கள்

சகல வியாதிகளுக்கும் கைகண்டது.

திமிர் குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து, மேகம், தடிப்புகள், மாறிவிட்டது. ஆறாத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல், குன்மம், வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல்முதலிய எல்லாவியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம் நற்சாக்ஷிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 நாள் 100 வேளை பஸ்பமும் அனுபானமும் விலை ரூ. 50. 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுபானமும் விலை ரூ. 25. ஏழைகளுக்குப் பாதிவிலை.

இனமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

நற்சாட்சி :—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ணகுணமாகி போற்றுவதை கவனியுங்கள்.

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேக வியாதியால் ஒன்னரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூரண குணமானன். மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானன் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A. M. துரைசாமி, 80-நிர்மார்க்கம் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27,

தாதுபுஷ்டிக்கு, பழனி, சி. எம். தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்.

வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்துபோன ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பி வரும்படி செய்கிறது. தாதுவிர்த்தியை கொடுத்து புத்திர சந்தானத்தை உண்டு பண்ணும். பத்தியமில்லை. 24-நாள் பஸ்பம் விலை ரூ. 10—0—0.

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,

C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை
பழனி, S. I.

பெரிய புராணம்.

[ஆழியான் வரைகின்றார்.]

இதனையாக்கிய சேக்கிழார் வேளாளரெனப் படுகின்றனர். இவர் சைவமதப் பெருமையைப் பரப்புவான் பொருட்டு இந் நூலை இயற்றினரென்று புராணம் கூறும். தொண்டர்கள் பலரின் பெருமையை விளக்கியதால் பெரிய புராணமாயிற்று போலும். ஏனைய புராணங்கள் எதாவது ஒருவர் பெருமையை யெடுத்துரைக்கும். இப்புராணமோ அறுபத்துமூவர் பெருமையை விரிக்கவந்ததாகும். சமண மதத்தை அறவே யொழிக்கற் பொருட்டும் அரசனை அச் சமயப்பற்றினின்று விடுவிக்கற் பொருட்டும் அதாவது, சமயப் போரைப் பெருக்கற் பொருட்டும் வெளிவந்தது.

நான்கு வருணமும் இந் நாட்டில் காட்டப் பட்டுப்பார்ப்பனீயம் உயர்ந்ததாக மதிக்கப்பட்டபின் வரைந்த நூல் சேக்கிழாரின் பெரு நூலாகும். தில்லை மூவாயிரம் பார்ப்பனர்களைப் 'புகழ்ந்தது முதலடியாகும். புகழ்ந்தது மட்டுமன்று, அடிமைத்தனத்தையும் வற்புறுத்துகின்றது. வாசர் வணிகர் வரலாறுகளுடன் அற்புதங்களைப் புணைத்துச் சைவத்தின் பெருமையைப் புலப்படுத்துகின்றது. தொல்காப்பியத்தில் நான்காம் 'வருணத்தார் வேளாளரெனப்படுகின்றது. சூத்திரரென்ற சொல் அதினிலகப்படவில்லை, அங்ஙனமிருப்ப சேக்கிழார் சூத்திரர் எனற மொழியை வழங்க நியாயமென்னே? பழைய இலக்கண நூலைப் படிக்கவில்லையா? அல்லது அடிமையை மேற்கொள்ள தொழுகலே சிறப்பென்று நினைத்தாரா? சிறிதேனும் சூத்திரன் என்கிற சொல்லுக்கு வடமொழியுரையாளர் கூறிய பொருளை ஆய்ந்தனராயின் இப் பழிச் சொல்லை இப் பெரிய நூலில் புகுத்தியிருப்பாரா? எனவே சேக்கிழார் சுயமரியாதையைச் சிறிதும் நாடியவரல்லரென்பது தெற்றெனத் தெளிவுறுகின்றது. இவரருளிய நூலைச் சுயமரியாதை விழையும் எம் மக்களாயினும் படித்துப் பெருமை பாராட்டப் புகுவாரா?

சேக்கிழார் பக்திமானாயிருக்கலாம். ஆராய்ந்து பார்க்குந் தன்மை எவ்வளவேனு மிருக்குமாயின், வேசி மக்கள், அடிமை போன்ற பொருளில் வடமொழி நூலார் கூறியிருப்பதைக்கண்டும் அம்மொழியைக் கையாளுவரா?

சூத்திரர்யாவர்; தாய்வயிற்றிலிருந்து பிறந்தவர் எவருஞ்சூத்திரர்தானே. தாய்வழிப்பிறவாமல் வேறுவழிப்பிறந்தமக்களுளரேல் அவர் சூத்திரரல்லார். நூலணியும்வரை பிராமணப்பையன் சூத்திரனென்றே சொல்லப்படுகின்றான். யாண்டும் அவன் உண்ணலாம், பருகலாம், என்பர். நூலணிந்தவுடன் தாய்வழிப்பிறப்பினுடன் ஞானப்பிறப்புமெய்துவதனால் இருபிறப்பாளனாகிறான். இந்தவுண்மையை அறியாதமாந்தர் தாழ்வானமக்களை சூத்திரரென்பர். அதாவது பிறந்தமேனியிலே ஞானநூல் பயிலாமல் வாளாவிருப்பவன் சூத்திரனே, கல்விகற்றுத் தேர்ந்து ஞானமுற்றியிருப்பவனைச் சூத்திரனென்றழைத்தல் மடமையேயாகும். மன்னியன் அறியாமையாலுஞ் செருக்குற்றும் கொடுத்தபெயரைத் தமக்குப்பெயராக ஏற்றுக்கொண்ட அறிவிலிகளனைவருஞ் சூத்திரரே. கழுதைவிட்டையில் முதல்விட்டைவேறு கடைசிவிட்டைவேறு யென்று சொல்லுகின்றவாறு சூத்திரரில் சற்சூத்திரர், அசற்சூத்திரர் என்று இருபாகுபாடு செய்து பணம்படைத்த வொழுக்கமுள்ளவர் சற்சூத்திரரென்றும் ஏனையமக்கள் அசற்சூத்திரரென்றும் மம்மைத்தம்மையழைத்துக் கொள்ளுதல் அறியாமை யன்றோ? இளையான்குடிமாற நாயனார் புராணத்தின் தலைச்செய்யுளில் இப்பழிச் சொல் வழங்கப்பட்டிருக்கிறது.

'நம்புவாய்மையின் நீடு சூத்திரநற்குலஞ் செய் தவத்தி…லிம்ப… ஞாலம் விளக்கினார் இளையா… குடிப்பதிமாறனார்' இதனால் மாறனார் சற்சூத்திரராகின்றார்!

பெரியபுராணம், ஆறுமுகநாவலர் பதிப்பு, பக்கம் 101 எறிபத்தநாயனார் புராணம், சூசனத்தில் இவ்வாறு வரையப்பட்டிருக்கின்றது. "சைவாசாரியருக்கும் சிவனடியாருக்கும் இடர் செய்தவரைக் கொல்லுதல் பெரும்புண்ணியமாம். இடர் செய்தவர் பிராமணராயேனும் தபோதனராயேனும் இருப்பின் அவரைக் கொல்லாமல் பிறவழியால் வெல்லல்வேண்டும். எறிபத்தநாயனார், சிவனடியார்களுக்கு இடையூறு செய்தவர்களை மழுவினால் வெட்டுதலே பிரதிலாகக் கொண்டமையாலும், சிவகாமியாண்டார் சிவனுக்குச் சாத்தும்படி கொண்டுவந்த பூவைப் பறித்துச் சிந்தியதே யானை அரசனது பட்டயானையென்பது பாராமல், அதனையும் அது தீங்குசெய்த பொழுது விலக்காத பாகர்களையும் கொன்றமையாலும் "எங்க" இச்சூசனத்தினின்று வெளிப்படுகிற செயலை உற்று நோக்குக. அடியார்க்கு கேடிழைக்கும் இடர்களைக் கொன்ற… புண்ணியமெனின் பிராமணரைக் கொல்லலாகாது என்றல் என்ன நியாயம்? மக்களிடை ஒவ்வொருவர்க்கு ஒரு நியாயம் என்றால் புண்ணியமென்கிற இடர் விளைப்பவன் எவனேயாயினும் அவனை கொல்லுதல் புண்ணியமாயின் அறிவொழுக்கிற் சிறந்தவரென்று பிறருக்கும்… பிராமணர் அடியார்க் கிடரிழைப்பின் அவரைக்கொல்லுதல் மகா புண்ணியமன்றோ? அறிவிலிகளைக் கொல்லுதல் குற்றமாகும். அவனையிருப்ப… மாறாக நியாயம் பேசுதல் ஒரு…வன்றோ? எவரையும் கொல்லாமை நற்மெனின், ஒரு இனத்தாரைக் கொல்லாமல் வேறுவழியால் வெல்லவேண்டுமென்று விதித்தல் ஒழுங்கோ "இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்" இதுவன்றோ குலச்சார்பில்லாத மேலான நடைமுறை. ஒரு குலத்திற்கொரு நியாய மென்று கூறும் மனுதர்ம சாத்திரத்தைப் போசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் மனோன்மணியத்திற் கண்டித்துளாரன்றோ? சமயக்கொள்கை வேற்றுமைக்காகக் கொல்லுதல் மூடநம்பிக்கைக் காலத்திற்கு ஏற்றதேயொழிய மதிமிக்க செல்லும் சுயமரியாதை யாருக்கு அடுத்ததாகாது.

'ரிவோல்ட்' 'ரிவோல்ட்'

'REVOLT'

"குடி அரசு"க் கொள்கைகளைக் கொண்டு கூடிய சீக்கிரம் வாரம் ஒருமுறை வெளியாகும் ஓர் ஆங்கில பத்திரிகை.

வருட சந்தா ரூ. 5 தான்.

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

ஆசிரியர்- "குடி அரசு" & "ரிவோல்ட்,"

ஈரோடு.

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்கைக்கெடியாரங்கள்.

இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போலிருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்ரவாதம். ரு 4-15-0 வி. பி. வேறு

ஜீனன் வாட்சு கம்பெனி

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

திருப்தி யில்லாவிடில் பணம் வாபீஸ்.

நூதனமாகக் கண்டுபிடித்துத் தயாரித்துவரும்

கை தையல் மிஷின்.



இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த நூதன மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் பணம் சம்பாதிக்க முடியும். இதனால் கை குட்டைகள், ஜாக்கெட்டுகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணிகளிலும் மல்துணிகளிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் செய்யலாம். நவராத்திரிக்காகப் பெரிய பொம்மைகளுக்கு நன்கு அலங்காரம் செய்ய உதவும்.

உறுதியான மெஷின் ஐம்பதுவருஷமானாலும் கெடாது.

விலை ரூபாய் 4—15—0 தபால் செலவு இனம்.

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி.

தபால் பெட்டி 119, மதராஸ்.

மாடுகளுக்கு நோய்கண்டால் மனிதர்கள்செய்யும் அக்கிரமம்

திருக்கோவிலூர் தாலுக்கா அருதங்குடியில் 30—9—28 ஞாயிற்றுக்கிழமை காலை 11-மணிக்கு ஊரைசுற்றியிருக்கும் சந்திக்கல் தோறும் அபிஷேகம் செய்து விநாயகர் சன்னிதிக்கு எதிரிலிருக்கும் நடுச்சந்திக்கு சுமார் 1000 குடம் ஜலம் குளத்திலிருந்து கொண்டுவந்து கொட்டினார்கள். அபிஷேகம் முடிந்தான உடன் அதிசயமான செய்கை ஒன்று நடத்தினார்கள். அதாவது சந்திக்கெதிரில் சுமார்1கெஜம் ஆழமும் இரண்டடி அகலமுமுள்ள குழிஒன்று தயாரித்து அதில் ஒரு ஆடு, ஒரு பன்றி, ஒரு கோழி, இவைகள் மூன்றையும் தலைகள் வெளியில் தெரியும்படி உயிருடன் புதைத்து ஊரிலுள்ள மாடுகள் எல்லாவற்றையும் அத்தலைகளின்மேல் ஓட்டினார்கள். மாடுகள்மிதிக்க மிதிக்கத்தலைகள் நசுங்கி ஆடு பன்றி கோழி உயிர்துறந்தன, அந்தோ பரிதாபம்! இந்த அடாத செய்கையைப் பார்த்துசில ஜனங்கள் பரிதபித்தார்கள்.

மாடுகளுக்கு வியாதி வந்ததென்றால் ஆடு பன்றி கோழிகளைபுதைத்து மந்தையாடுகளை ஓட்டினால் நோய் தீர்ந்து விடுமா? இதென்ன மதியீனம்! இப்படியும் சாஸ்திரத்திலோ இன்னும் மற்றவைகளிலோ சொல்லுகிறதா? இதெல்லாம் தெரியாமல்மூடத்தனமாக சிலர் செய்கின்றார்களென்றால தெரிந்த கனவான்களும் கூட இருந்து நடத்துகிறதைப் பார்த்தால் ரொம்பவும் பாப பரிதாப நிலைமையை உண்டுபண்ணுகிறது. கல்விமான்களே! "மன்னுயிரைத் தன்னுயிர்போற் காக்கும் புருஷனே புருஷன்" இனிமேலாவது இப்படிப்பட்ட கொடுஞ் செய்கைகளை மறந்து "அனைத்துயிர் ஒன்றென்றெண்ணு" என்னும் "குடி அரசி"ன் கொள்கையை கடைப்பிடிக்கும்படி வேண்டுகிறோம்.

A. T. கெங்காதரம் பிள்ளை.

அறிவிப்பு.

"குடி அரசு" வாரப் பத்திரிகையின் மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வருட சந்தா உள் நாட்டுக்கு ரூபாய் மூன்று தான்.

வெளி நாடுகளுக்கு ரூபாய் நான்கு.

மானேஜர்.

பால்காயம் 12 தோலா ரூபா 1.
ரப்பர்ஸ்டாம்பு செட்டுடன் ரூ 2.


பித்தளை அரக்கு சீல் ரூ. 1—0—0.
கேட்லாக்கு எழுதிக் கேட்கவும்.
போஸ்டேஜ் இனாம்.
டி. ஜி. சுந்தரம் அண்டு கோ.,
கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

அநேக தங்க மேடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்ற டாக்டர் எஸ். பி மருந்துகள்.

[ரூ. 1-8-0] அமிர்தரஸம். (Rs. 1-8-0)

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசராயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரஸம் தான். நாழிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரஸம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும் தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி அன்றாடம் கிரமமாய் மலப்பிரவர்த்தி செய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் கேட்லாக் பார்க்கவும்.
24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்த உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்தது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0. 50 மாத்திரை ரூ. 8—8—0. வி. பி. வேறு.

தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனாபஜார், மதராஸ்.

ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க பதக்கங்களும் பரிசுபெற்று வருவது.

குருநாத சஞ்சீவி எண்ணை.

7-நாள் சாப்பிடக்கூடியது விலை ரூபாய் 3-0-0 தபால் சார்ஜ் வேறு.

இந்த எண்ணை முக்கியமாய் மூலவியாதி உள்ளவர்கள் சாப்பிட்டால் பூர்ணசுகமடையலாம்.
தீரும் வியாதிகள் :— மூலச்சூடு, வெட்டைச்சூடு, வெள்ளை, பவுத்திரம், மேக காங்கை, திரேக எரிச்சல், மலசிக்கல், வாய்ப்புண், நீர் எரிச்சல், முதலிய சகலவியாதிகளையும் உடனே கண்டிப்பதோடு, திரேகத்துக்கு குளிர்ச்சியை கொடுக்கும். பத்தியம இல்லை.
உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

ஆராத புண்களை 3 வேளையில் குணத்தைக் காட்டக்கூடிய,

சித்த சர்வ ரணக் களிம்பு.

டப்பி விலை ரூபாய் 1-0-0 வி, பி. வேறு.

இந்தக் களிம்பை புண் இருக்கும் இடத்தில் காலை, மாலை இருவேளையும் தடவிக்கொண்டு வந்தால் 5-நாளையில் எவ்விதமான புண்களும் ஆறிவிடும் என்பது கை கண்டபலன்.

விலாசம் :— ராஜவைத்திய ஆஸ்ரமம்,
சேவ்வாய்பேட்டை, சேலம்.

திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரி.

இந்தியாவிலே குறைந்த விலையுள்ள பனியன்கள் எங்களிடம்தான் கிடைக்கும். விலை 32 இஞ்சு கார்டிகன் டஜன் 1-க்கு ரூபா 3—8—0 தான்.
இன்னும் பலவிதமான பனியன் தினுசுகளும் கிடைக்கும்.
விலைவிபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.
எல்லா இடங்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

நான்காம் பதிப்பு! நான்காம் பதிப்பு

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம். நேர்த்தியான அச்சு.

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்ட சித்திரங்கள் அநேக அமைந்த படங்களுடன் கூடியது.



இந்த வியாப்பிளேன் டிரேட்மார்க்பார்த்து வாங்குங்கள். இந்த டிரேட் மார்க் இருந்தால்தான் உண்மைப் புஸ்தகம்.

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1 துறவிகளின் கதி என்ன
2 இல்வாழ்க்கை ஏன் சிறந்தது.
3 இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி.
4 இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும் பாடு.
5 பெண்ணின் பெருமை. பெண் கல்வி,
6 காமம் எப்படி உண்டாயிற்று?
7 உடைக்கும் காமத்திற்கும் சம்பந்தம்.
8 நாம் ஏன் உடை தரிக்கவேண்டும்?
9 நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன.
10 இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்.
11 ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன, உண்மையான கலியாணம் எது.
12 காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13 இல்லறத்தில் எப்படி வெற்றியடைவது?
14 மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15 கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16 நமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டு கொள்வது?
17 ஸ்திரீகளுக்கு எப்பொழுது காமம் உண்டாகிறது?
18 அவர்களிடத்தில் அமிர்த நிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19 பல ஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20 சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21 ருது காலத்தின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22 பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்குக் காரணம். இதைப் போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23 மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24 கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்று எப்படி அறிந்து கொள்வது?
25 கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய முறைகள்.
26 கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக் கூடிய வியாதிகள்.
27 அவைகளைப் போக்கடிக்கும் உபாயங்கள்.
28 முதல் மாதத்திலிருந்து கடைசி மாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29 ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.
30 புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது. இதைப் போக்கிக் கொள்வதெப்படி.

31 அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டிற்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத் தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்கமுடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுக் கொலை அநியாயம்.

32 ஒருவன் எத்தனை மாதரை மணம்புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக்காப்பாற்றிக் கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்கவேண்டுமானால் அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்.

33 தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா. தாசிகள் வீட்டிற்குப் போகும் நண்பர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

விலை ரூபாய் 2-0 0.

ஒரே சமயத்தில் இரண்டு காபிகளுக்கு எழுதினால் உள்நாட்டுக்கு தபால் செலவு இனாம்.

வாஸன் புஸ்தகசாலை,

241, தங்கசாலைத் தெரு, தபாற் பெட்டி நெ. 119 ஜி. டி. மதுராஸ்.

'விஸ்வநேசன்'

விஸ்வகுல முன்னேற்றத்திற்கு
உழைத்துவரும் ஒரு
வாரப்பத்திரிகை

தற்கால நிலைமைக்கேற்ற வண்ணம் பொதுவான சீர்திருத்தக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டது.

ஆசிரியர் திரு. கா. சுப்பண்ணாச்சாரி

இதன் வருட சந்தா ரூ 3—0—0
வெளிநாட்டுக்கு ரூ 4—0—0

விலாசம்:— மானேஜர்,
விஸ்வநேசன் காரியாலயம், ஈரோடு.

தீபாவளி! தீபாவளி!!

நவீன கலர்புடவை.

உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட் கருப்பு, செகப்பு, ஸ்கப் கலர்கள்; கெட்டிச் சாயம், கரையிலும், முந்தியிலும் பூவேலை மான முள்ள அதன புடவை.

18 மு X 46 அங் புடவை ரூ. 4...14—0
ஷை கலர்களில் சாதா புடவை 4— 4—0

கைதிசயில் தயாரித்த உடல் செகப்பு, கருப்பு, பலமாதிரி புள்ளிகள் போட்ட ஜரிகை உத்திராட்சம் பேட்டுவைத்து 1 இஞ்சு ஜரிகை முந்தி போட்டது.

18 மு X 46 அங் புடவை 1க்கு ரூ. 7-0-0
ஷை ஜரிகை பெங்களூர் முந்தி போட்ட புடவை 1க்கு 7-12-0

6th Edition கேட்லாக் இனும்.
The Madura Oriental Trading Co ,
Laxmi Cloth Store, Madura (S. I.)

பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. திலுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

கணித சோதிடம்.

பரகித கணிதப்படி கணிதஞ் செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதிஅனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதிஅனுப்புவதைக்கொண்டு பெண்ணுக்குப்புருஷனும் புருஷனுக்குப்பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீகசோதிட நூற்களும்பலவுள்ளதால் நாங்கள் எழுதிஅனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார்பேட்டை, புதுச்சேரி.

---

64 — பக்கம் — 64

ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதை சந்தா நேயர்களுக்கு வெகு சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாரராகச் சேருகின்றனர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆனந்த விகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு
தபால் கூலியுள்பட 1...0...0
வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ 1...4...0

மாதிரி காபி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244. தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்", டெலிபோன் நெ. 3311.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2}$x $2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும், சிறிது காலத்துக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பத்திரிகையில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.